Registered as a Newspaper

# உதயன்

பக்கங்கள் 12

விலை ரூ. 50

சுடர் : 38
கதிர் : 290

செவ்வாய்க்கிழமை 12 செப்ரெம்பர் 2023

...டு 2054

## நல்லூர்க் கந்தனுக்கு நாளை தேர்

யாழ்ப்பாணம், செப். 12
வரலாற்றுச் சிறப்புமிக்க நல்லூர்க் கந்தசுவாமி ஆலய வருடாந்த பெருந் திருவிழாவின் தேர்த் திருவிழா நாளை புதன் கிழமை காலை 6.15 »10

# மனித உரிமை மீறல்களை ஏற்கவேண்டும் இலங்கை!



### ஐ.நா. மனித உரிமைகள் பிரதி ஆணையாளர் காட்டம்

### மனித உரிமைகளை மீறிய 10 பேரின் விவரங்களை ஐ.நா.விடம் சிலதரப்புகள் கோரியுள்ளன

ஜெனிவா, செப்ரெம்பர் 12
கடந்தகால மனித உரிமை மீறல்களை ஒப்புக்கொள்ள வேண்டிய கடப்பாடு இலங்கைக்கு இருப்பதாக ஐ.நா. மனித உரிமைகள் பிரதி ஆணையாளர் நடா அல் நஷிப் தெரிவித்தார். ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 54ஆவது கூட்டத்தொடர் நேற்று ஜெனிவாவில் ஆரம்பமாகிய நிலையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். »11

## ஐ.நா. தீர்மானங்களை இலங்கை நிராகரிப்பு!

கொழும்பு, செப். 12
ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் பொறுப்புக்கூறல் தொடர்பான திட்டத்தை இலங்கை அரசாங்கம் முற்றாக நிராகரிக்கின்றது என ஜெனிவாவுக்கான இலங்கை »11

## 'சனல் -4' காணொலி பிரிட்டன் விசாரணை

கொழும்பு, செப். 12
'சனல்- 4' காணொலி தொடர்பில் அரச புலனாய்வுப் பிரிவின் தலைவர் மேஜர் ஜெனரல் சுரேஷ் ஷாலே செய்த முறைப்பாட்டின் பிரகாரம் பிரிட்டனின் இலத் »11

## 'சனல் –4' காணொலி சர்வதேச விசாரணை உடனடியாக நடத்துக!

*மொட்டுக் கட்சியும் வலியுறுத்து*

கொழும்பு, செப். 12
பொதுஜன பெரமுன கட்சியின் மீள் எழுச்சியால் உள்நாட்டுக் கட்சிகள் மட்டுமல்ல சர்வதேசமும் அஞ்சுகின்றதா »11

செலான் வங்கியிடமிருந்து
உங்கள் தங்கப் பவுணிற்கு...
முற்பணம்
ரூ.120,000/=
வட்டிவீதம் மேலும் குறைக்கப்பட்டுள்ளது.
• அதிகபட்ச இரகசியத்தன்மை
• சிநேகபூர்வமான உடனடி சேவை
• சிறந்த பாதுகாப்பு
மேலதிக விபரங்களுக்கு அருகிலுள்ள செலான் வங்கியை நாடுங்கள்
011 200 88 88
செலான் வங்கி

## கொக்குத்தொடுவாயில் 3 உடற்பாகங்கள் நேற்று மீட்பு

*ஊடகங்களுக்கு கட்டுப்பாடு*

முல்லைத்தீவு, செப். 12
மூன்று உடற்பாகங்கள் நேற்று மாத்திரம் மீட்கப்பட்டுள்ளன. ஏற்கனவே மீட்கப்பட்ட இரண்டு »11

## 3 தனியார் மருத்துவக் கல்லூரிகளை ஆரம்பிக்க அமைச்சரவை அங்கீகாரம்




*சுகாதார அமைச்சர் தகவல்*

கொழும்பு, செப். 12
இலங்கையில் மூன்று தனியார் மருத்துவக் கல்லூரிகளை தற்போதுள்ள மருத்துவபீடங்களின் தரத்துக்கு அமைவாக அமைப்பதற்கு அமைச்ச »11

## ரயில் சாரதிகள் வேலை நிறுத்தம்

கொழும்பு, செப். 12
பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து ரயில்வே பொறியியல் சாரதிகளின் சங்கம் நேற்று நள்ளிரவு முதல் வேலை நிறுத்தத்தை ஆரம்பித்துள்ளது. (ஒ-இ)



## சம்பந்தனை சிறையில் போட்டிருக்கவேண்டும்

*பெரமுன சீற்றம்*

கொழும்பு, செப். 12
சம்பந்தன் புலிகளுடன் கைகோர்த்திருந்தார், போர் முடிவடைந்தவுடன் அவரைச் சிறையில் அடைத்திருக்கவேண்டும், ஆனால் »10

## மல்லாகம் நீதிமன்றில் 50 கிலோ கஞ்சா மாயம்!

யாழ்ப்பாணம், செப். 12
மல்லாகம் நீதிமன்றில் வழக்கு நடவடிக்கைகளுக்காக களஞ்சியத்தில் வைக்கப்பட்டிருந்த 50 கிலோ கஞ்சா காணாமற் போயுள்ளதாக தெரிவித்து தெல்லிப்பழை பொலிஸ் நிலையத்தில் பதிவாளரால் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. இதனையடுத்து தெல்லிப்பழை பொலிஸார் சம்பவ இடத்துக்குச் சென்று »11

### சிறுமியின் கை அகற்றப்பட்ட விவகாரம்:

## கொழும்பு சுகாதார அமைச்சால் விசேட விசாரணைக்குழு நியமிப்பு

**5 அதிகாரிகள் இன்று யாழ். வருகை**

யாழ்ப்பாணம், செப். 12
8 வயதுச் சிறுமியின் கை அகற்றப்பட்ட சம்பவம் தொடர்பில் விசாரணை முன்னெடுப்பதற்காக கொழும்பு சுகாதார அமைச்சின் 5 அதிகாரிகள் யாழ்ப்பாணம் »10




# தமிழர்கள் மீண்டும் ஆயுதங்கள் தூக்கார்

## அடித்துக் கூறுகின்றார் அநுர

கொழும்பு, செப். 12

**உள்நாட்டுப் போரால் வடக்கு மக்களே பெரிதும் பாதிக்கப்பட்டார்கள். அதனால் வடக்கில் மீண்டுமொரு பலமான ஆயுதப் போராட்டம் உருவாகுவதற்கான சாத்தியம் இல்லை, அதற்கான வாய்ப்பு அரிதிலும் அரிது என்றே கூறவேண்டும் என்று ஜே.வி.பி.யின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.**

ஓய்வுபெற்ற முப்படை அதிகாரிகளுடன் நடைபெற்ற கூட்டத்தில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

இலங்கையில் பல்லின சமூகம் வாழ்கின்றது, பல கலாசாரம் இருக்கின்றது. தேசத்தைக் கட்டியெழுப்ப வேண்டுமெனில் இவர்களுக்கிடையில் நல்லிணக்கம், ஐக்கியம் என்பது மிக அவசியம். போர் முடிவடைந்த பின்னர் நல்லிணக்க அமைச்சுகூட உருவாக்கப்பட்டது. அரசியல் செய்வதாக இருந்தால் அவர்களுக்கு இங்கு இன ஐக்கியம் இருக்கக்கூடாது. அதனால் அரசியல் ரீதியில் மக்களைப் பிளவுபடுத்தினர்.

2009ஆம் ஆண்டு போர் முடிவடைந்த பிறகு ஒன்றரை தசாப்தகாலத்துக்குள் இலங்கையில் மீண்டும் குண்டுவெடிப்புச் சம்பவம் இடம்பெறும் என நினைத்தீர்களா? எவரும் எதிர்பார்க்கவில்லை. ஆனால் அரசியல்வாதிகளுக்கு ஆட்சியை பிடிக்கவேண்டிய தேவைப்பாடு இருந்தது.

2015ஆம் ஆண்டு ஆட்சியை இழந்த பின்னர் வேலையை மீண்டும் ஆரம்பித்தனர், வடக்கில் மீண்டும் ஒரு போர் பற்றிய தகவல்களைப் பரப்பினர். புலிகளின் நிழல் என்றெல்லாம்கூட நிறையச் செய்திகள் உருவாக்கப்பட்டன. போரை முடிவுக்குக் கொண்டு வந்த உங்களுக்கு (முப்படையினர்) புலிகள் அமைப்பு மீள வருவது தொடர்பில் போர் சார்ந்த கருத்தொன்று இருக்கலாம், எனக்கு அரசியல் கருத்தொன்றும் உள்ளது. அதாவது வடக்கில் மீண்டும் பலமான ஆயுதக்குழுவொன்று உருவாவதற்கான சாத்தியம் மிகக் குறைவு, அதற்கு இடமில்லை.

ஏனெனில் போரால் வடக்கு மக்களே அதிகம் பாதிக்கப்பட்டார்கள். எந்நாளும் போரை எதிர்கொண்டனர், ஆயுதக் குழுக்களுக்கு இடையில் மோதல் இருந்தது, இந்திய இராணுவத்துடன் மோதல் இருந்தது. 30 வருட போரால் வடக்கே பெரிதும் பாதிக்கப்பட்டது. அங்குள்ள தாய்மாருக்கு தமது பிள்ளையை படிக்க வைக்க வேண்டும், சிறந்த வேலைக்கு அனுப்ப வேண்டும், தமது பிள்ளைகளை மணம்முடித்துவைக்க வேண்டும் என்ற எண்ணம் இருக்காதா? ஆனால் வடக்கு இளைஞர்கள் போருக்காகவே பிறந்தவர்கள் என்ற எண்ணம் தெற்கில் விதைக்கப்படுகின்றது. 2015க்கு பிறகே புலிகளின் எழுச்சி பற்றி அதிகம் செய்திகள் பரப்பப்பட்டன, ஆவாக் குழு பற்றிக்கூட அச்சம் கிளப்பப்பட்டது. 2015 2017 காலப்பகுதிக்குப் பின்னர் அதுபற்றிப் பேசப்படவில்லை. அதன்பின்னர் முஸ்லிம் அடிப்படைவாதம் பற்றி கதைக்கப்பட்டது - என்றார். (எ-44)

# சம்பள, ஓய்வூதிய திகதிகள் அறிவிப்பு

யாழ்ப்பாணம், செப். 12

அடுத்த ஆண்டுக்கான அரச அலுவலர்கள், ஆசிரியர்கள் மற்றும் பாதுகாப்புப் படையினரின் மாதாந்த சம்பளம் வழங்கல் திகதிகளும், ஓய்வூதியர்களுக்கான ஓய்வூதியத் திகதிகளும் அறிவிக்கப்பட்டுள்ளன.

ஆசிரியர்களுக்கு ஜனவரி மாதம் 18ஆம் திகதியும், பெப்ரவரி மாதம் 16ஆம் திகதியும், மார்ச் மாதம் 19ஆம் திகதியும், ஏப்ரல் மாதம் 10ஆம் திகதியும், மே மாதம் 16ஆம் திகதியும், ஜூன் மாதம் 18ஆம் திகதியும், ஜூலை மாதம் 19ஆம் திகதியும், ஓகஸ்ட் மாதம் 16ஆம் திகதியும், செப்ரெம்பர் மாதம் 19ஆம் திகதியும், ஒக்ரோபர் மாதம் 21ஆம் திகதியும், நவம்பர் மாதம் 19ஆம் திகதியும், டிசெம்பர் மாதம் 17ஆம் திகதியும் சம்பளத் திகதியாக அறிவிக்கப்பட்டுள்ளது.

ஓய்வூதியர்களுக்கு ஜனவரி மாதம் 10ஆம் திகதியும், பெப்ரவரி மாதம் 9ஆம் திகதியும், மார்ச் மாதம் 7ஆம் திகதியும், ஏப்ரல் மாதம் 8ஆம் திகதியும், மே மாதம் 10ஆம் திகதியும், ஜூன் மாதம் 10ஆம் திகதியும், ஜூலை மாதம் 10ஆம் திகதியும், ஓகஸ்ட் மாதம் 9ஆம் திகதியும், செப்ரெம்பர் மாதம் 10ஆம் திகதியும், ஒக்ரோபர் மாதம் 10ஆம் திகதியும், நவம்பர் மாதம் 8ஆம் திகதியும், டிசெம்பர் மாதம் 10ஆம் திகதியும் ஓய்வூதியத் திகதிகளாக அறிவிக்கப்பட்டுள்ளன. (எ-9)

# திறைசேரி உண்டியலை விற்கிறது மத்திய வங்கி

கொழும்பு, செப். 12

ஒரு லட்சத்து 60 ஆயிரம் ரூபா பெறுமதியான திறைசேரி உண்டியல்கள் எதிர்வரும் 13ஆம் திகதி ஏல விற்பனை ஊடாக வழங்கப்படவுள்ளது என்று இலங்கை மத்திய வங்கி அறிவித்துள்ளது.

91 நாள்கள் முதிர்வுக் காலத்தைக் கொண்ட 80 ஆயிரம் மில்லியன் ரூபா பெறுமதியான திறைசேரி உண்டியல்களும், 182 நாள்கள் முதிர்வுக் காலத்தைக் கொண்ட 40 ஆயிரம் மில்லியன் ரூபா பெறுமதியான திறைசேரி உண்டியல்களும், 364 நாள்கள் முதிர்வுக் காலத்தைக் கொண்ட 40 ஆயிரம் மில்லியன் ரூபா பெறுமதியான திறைசேரி உண்டியல்களும் ஏல விற்பனை ஊடாக வழங்கப்படவுள்ளன என்று மத்திய வங்கி தெரிவித்துள்ளது. (எ-இ)

# அதிகரிக்கின்றது நீர்மின் உற்பத்தி

கொழும்பு, செப். 12

மின் உற்பத்தி நிலையங்களை அண்மித்த பகுதிகளில், அதிக மழையுடனான காலநிலை நிலவுவதன் காரணமாக நீர்மின் உற்பத்தியின் அளவு அதிகரித்துள்ளது என்று இலங்கை மின்சார சபை தெரிவித்துள்ளது.

15 சதவீதமாக காணப்பட்ட நீர்மின் உற்பத்தி 20 சதவீதமாக மாக அதிகரிக்கப்பட்டுள்ளது என்று அதன் பொது முகாமையாளர் ரொஹான் செனவிரத்ன தெரிவித்துள்ளார். தற்போதும் மழை பெய்து வருவதால் மின் தேவை குறைந்துள்ளது என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஒரு மணித்தியாலத்துக்கு 45 ஜிகாவாட்ஸ் தேவையாக இருந்த மின்சாரத்தின் தேவை தற்போது மணித்தியாலத்துக்கு 42 ஜிகாவாட்ஸ் ஆகக் குறைந்துள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார். (எ-இ)

# சனல் 4 விவகாரத்தில் சர்வதேச விசாரணை

## வலியுறுத்துகிறார் பாக்கீர் மார்க்கார்

கொழும்பு, செப். 12

நாடாளுமன்றத் தெரிவுக்குழு மூலம் எந்தச் சந்தர்ப்பத்திலும் எதிர்பார்த்த முடிவுகள் எட்டப்படவில்லை. அதற்குப் பின்னரும் நாடாளுமன்றத் தெரிவுக் குழுவின் ஊடாக விசாரணை நடுநிலையாக நடத்தப்படும் என எதிர்பார்க்க முடியாது. சனல்-4 வெளிக்கொணர்வு தொடர்பில் சர்வதேசத்தால் ஏற்றுக்கொள்ளக்கூடிய, முறையான விசாரணைகளே அவசியம் - இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் இம்தியாஸ் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

மக்களால் நிராகரிக்கப்பட்ட நாடாளுமன்றம் ஒன்றே தற்போது நாட்டில் உள்ளது.

இந்த நாடாளுமன்றத்தின்மீது நாட்டு மக்களிடத்தில் நம்பிக்கை இல்லாமல் போயுள்ளது.

சுகாதார அமைச்சருக்கு எதிராக கொண்டுவரப்பட்ட நம்பிக்கையில்லா பிரேரணை தோற்கடிக்கப்பட்டாலும் பிரேரணையில் முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டுகளுக்கு தீர்வு கிடைத்ததா? மருந்துத் தட்டுப்பாட்டுப் பிரச்சினைக்குத் தீர்வு கிடைத்ததா? புத்திஜீவிகள் நாட்டை விட்டு வெளியேறுகின்றமை தடுக்கப்பட்டதா? தரமற்ற மருந்துகள் மூலம் ஏற்பட்ட உயிரிழப்புகளுக்கு நியாயம் கிடைத்ததா? இல்லை. எந்தப் பிரச்சினைக்கும் தீர்வு கிடைக்கவில்லை. நிராகரிக்கப்பட்ட நாடாளுமன்றத்தில் உள்ள பெரும்பான்மையானவர்கள் ஆதரவு மூலம் பிரேரணை தோற்கடிக்கப்பட்டுள்ளது. அது மாத்திமே நடந்துள்ளது. ஆனால் சுகாதாரத்துறையில் ஏற்பட்டுள்ள நெருக்கடிகளுக்கு முகம் கொடுத்துள்ள மக்கள் தொடர்ந்தும் கஷ்டத்திலேயே உள்ளனர். உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் சனல்-4 வீடியோ மூலம் வெளிப்படுத்தப்பட்டுள்ள விடயம் என்ன? அதனூடாக சர்வதேச சமூகம் என்ன எதிர்பார்க்கிறது? இந்தத் தாக்குதலின் பின்னணியில் சந்தேகங்களும், குழப்பங்களும் காணப்படுகின்றன. அதை ஆராய வேண்டிய பெரும் பொறுப்பொன்று இருக்கிறது. தாக்குதல் சம்பவம் இடம்பெற்று நீண்ட நாள்கள் கடந்துள்ளன. இந்தச் செய்தியை வெளிப்படுத்தியவர்கள் மீது சாடுவதை நிறுத்தி விட்டு அதில் என்ன விடயம் கூறப்பட்டுள்ளது என கண்டறிந்து உண்மைகளை வெளிக்கொணர வேண்டும் - என்றார். (எ-இ)

# மட்டக்களப்பு கடலில் 4.6 ரிக்டர் நில அதிர்வு

மட்டக்களப்புக்கு வடகிழக்கே 310 கிலோமீற்றர் தொலைவில் கடற்பரப்பில் 4.6 ரிக்டர் அளவில் நில அதிர்வு உணரப்பட்டுள்ளது.

நேற்றுத் திங்கட்கிழமை அதிகாலை 1.30 மணியளவில் நில அதிர்வு பதிவாகியுள்ளது என்று இலங்கை புவிச்சரிதவியல் அளவை சுரங்கத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இந்த நில அதிர்வால் இலங்கைக்கு சுனாமி அச்சுறுத்தல் இல்லை என இலங்கை புவிச்சரிதவியல் அளவை சுரங்கத் திணைக்களம் தெரிவித்துள்ளது. (எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




இப்ப தமிழ்த்தினப் போட்டி... ஒருபக்கமாவும், ஆங்கிலதினப் போட்டியள் இன்னொரு பக்கமாவும் வலய மட்டங்களில நடந்து முடிஞ்சிருக்கு. 'பேஸ்புக்கும் பேக் ஐடியையும்' எப்பிடிப் பிரிக்க ஏலாதோ ,அதே மாதிரி இந்தத் தமிழ்த் தினப்போட்டியள், ஆங்கில தினப் போட்டியளும், முடிவுகளில குழப்பமும் பிரியாத வரம் வேண்டி வந்திருக்க வேணும். காக்கைக்கு தன் குஞ்சும் பொன்குஞ்செண்ட மாதிரி, எல்லாப் பள்ளிக்கூடங்களுக்கும் தங்கட போட்டி நிகழ்ச்சியள் தான் மற்றப் பள்ளிக்கூடங்களின்ர நிகழ்ச்சியை விட திறம் எண்டுற எண்ணம் இருக்கும். அதால எங்களுக்கு ஏன் முதலாமிடம் தரேலை? அந்தப் பள்ளிக்கூடத்தின்ர நிகழ்ச்சியில எவ்வளவு பிழையள் இருக்கு தெரியுமோ? சேக்கிலரை மீறுற மாதிரி அவையின்ர நிகழ்ச்சி இருக்கு. 'ஜட்ஜ்மார்' பக்கச் சார்பா நடந்திட்டினம். விசயம் தெரியாத ஆக்களை என்னெண்டு 'ஜட்ஜா' போட்டனிங்கள்? எண்டு தங்களுக்குச் சார்பா தீர்ப்பு வராத பள்ளிக்கூடங்கள் பொங்கிக் கொண்டு வருவினம். ஆனா என்னதான் அவை பொங்கினாலும் 'நடுவரின் தீர்ப்பே இறுதியானது' எண்ட ஒற்றை நிபந்தனையால, ஒரு ஆணியும் பிடுங்க ஏலாமல் போடும்.

அதுக்காக டிப்பார்மெண்ட்காரரும் சுத்தமான சூசைப்பிள்ளையள் இல்லை. அவையும் ஏதோ போட்டியளை நடத்திமுடிச்சால் காணும் எண்டிட்டு, கண்ணுக்கு ஆப்பிடுற ஆக்களையெல்லாம் போட்டியளுக்கு ஜட்ஜ் ஆக்குகினம். அதோட அப்பிடி ஜட்ஜ் பண்ணப் போட்ட ஆக்களும், போட்டிக்கான சேக்கிலரை ( சுற்றுநிருபத்தை) ஒழுங்காப் பாக்கிறது குறைவு. சில கலைத்துறையளில கெட்டிக்காரர் இஞ்ச குறைவு. அதால ஆலையில்லா ஊருக்கு இலுப்பைப் பூவைத்தான் சக்கரையாப் பாவிக்கவேண்டியிருக்கு. இப்பிடியான சில விசயங்களால இந்தத் தமிழ்த்தின, ஆங்கில தினப் போட்டியளின்ர முடிவுகள் கனதரம் சிக்கலாகி, பள்ளிக்கூடங்களுக்கு இடையிலான பந்தடியாட்டம் மாதிரி பதறவைக்குது.

இப்பிடி பள்ளிக்கூடங்கள் தங்களுக்கு முதலாமிடம் தரவேணும் எண்டு சண்டை பிடிக்கிறதுக்கு மெயின் காரணம், தமிழ்த்தினப் போட்டியள் 'நொக்-அவுட்' முறையில நடக்கிறதுதான். முதலாமிடம் எடுக்கிற ஆக்கள்தான் அடுத்த கட்டத்துக்கு போகலாம்.ஒரு புள்ளியால முதலாமிடத்தை தவறவிட்டிட்டு, ரண்டாமிடம் வந்தாக்கூட அங்கால போக ஏலாது. அதாலதான் இந்த அடிபிடியள் கூட நடக்குது. இருபது வருசத்துக்கும் மேலா இப்பிடி தமிழ்த் தின, ஆங்கில தினப் போட்டியள் எண்டாலே பிரச்சினை கிளம்புது எண்டால், அதை எப்பிடி இல்லாமல் செய்யிறது எண்டு கண்டுபிடிச்சு சுற்றுநிருபத்தில மாற்றத்தைக் கொண்டந்திருக்கவேணும். ஆனால் இன்னும் அந்தக்காலத்தில தயாரிச்ச சுற்றுநிருபத்தில, வேலைப்பஞ்சியால ரண்டு, மூண்டு சொல்லையும், கருப்பொருளையும் மட்டும் மாத்திப் போட்டு அனுப்பிற விளையாட்டுத்தான் தொடர்ந்து நடக்குது. அதால பள்ளிக்கூடங்களும், கோட்டங்களும், வலயங்களும் , மாகாணங்களும் தங்களுக்குள்ள மாத்தி மாத்தி கொளுவுப்படுறதை விட்டிட்டு, அடுத்தவருசமாவது, உந்தப் போட்டியளுக்கான சுற்றுநிருபங்களை இப்பத்தைக் காலத்துக்கு ஏத்தமாதிரி மாத்திறதுக்கு அலுவல் பாக்கவேணும். அதோட முதலாமிடம் எடுக்கிறவை மட்டும்தான் அடுத்த கட்டப் போட்டிக்குப் போகலாம் எண்டதையும் மாத்தி, முதல் மூண்டு இடமும் போகலாம் எண்டதைக் கொண்டு வந்தாலே, கன பள்ளிக்கூடங்கள் இந்தப் போட்டி முடிவுகளால தங்களுக்குள்ள கடிபடுறதை நிப்பாட்டிப் போடுவினம்.



- பட்சி

## சொற்பொழிவு

யாழ்ப்பாணம், செப். 12

யாழ்ப்பாணம் - நீர்வேலி அருள்மிகு கந்தசுவாமி தேவஸ்தானத்தில் நடத்தப்படும் வாராந்தச் சிறப்புச்சொற்பொழிவு ஆலய சண்முக விலாச மண்டபத்தில் எதிர்வரும் 15ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 5 மணிக்கு இடம்பெறவுள்ளது.

சிறப்புச்சொற்பொழிவை இளம் சைவப்புலவர் ச.நவநீதன் 'ஆறுமுகமான பொருள்' என்னும் விடயப்பொருளில் ஆற்றவுள்ளார்.

★ ★ ★

சைவ வாழ்வியலில் பெரிய புராணம் பெறும் முக்கியத்துவம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும்முகமாகச்சிவஸ்ரீ பால. திருகுணானந்தக்குருக்கள் நடத்தும் வாராந்த பெரியபுராணச் சிறப்புச் சொற்பொழிவுத் தொடர் சிறுப்பிட்டி அருள்மிகு ஸ்ரீ நாகதம்பிரான் ஆலயப் பிரதான மண்டபத்தில் எதிர்வரும் 15ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 4 மணிக்குச் சிவநெறிப் பிரகாசர் சமய ஜோதி கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் இடம்பெறவுள்ளது.

சைவப்புலவர் செ.த.குமரன் 'திருநீற்றின் பின்னால் ஏனாதிநாதரும் இறைவன் திருவடி அடைந்தார்' என்னும் விடயப்பொருளில் ஆற்றவுள்ளார். (ம)



திருவிழா சிறப்புற வாழ்த்துவோர்
சாரங்கா ஜுவலரி
RIA, Western Union, Money gram
(நியூ சாரங்கா ஜுவலரியும், சாரங்கா நகைமாடமும் ஒரே கட்டடத்தில் இயங்குகின்றது)
இல.157/1, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
Tel : 021 222 6972, Fax : 021 222 8869
E-mail :sarankajewejjers@yahoo.com, web : www.sarangajawejjwes.com



நல்லூரான் சிறப்பம்சம்

### நல்லருள் தந்திட வேண்டும்

வேண்டியவர்க்கு வேண்டியதை
வரமளிக்கும் வேலவா,
தமிழன் படும் வேதனைகள்
போதும் இனி
கொடுந்துன்பங்கள்
நீங்கிடவே, துயரமெல்லாம்
பறந்தோடிட
தேரேறி வந்து நல்லருள்
தந்திட வேண்டும்
நல்லையம்பதியானே.

— சுதுமலை வீ.ரவி

# மக்கள்- கிராம அலுவலர்களை யாழில் மோதவிட்டு வேடிக்கை!

## ஐக்கிய கிராம உத்தியோகத்தர் சங்கம் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், செப். 12

அரசாங்கத்தின் நலன்புரிக் கொடுப்பனவுகள் விடயத்தில் யாழ். மாவட்டத்தில் ஏனைய மாவட்டங்களில் இல்லாத புதுப் புது விடயங்கள் உள்ளடக்கப்பட்ட படிவங்கள் வழங்கப்பட்டு கிராம அலுவலர்களையும் பொதுமக்களையும் மோதவிடும் செயற்பாடு முன்னெடுக்கப்படுகிறது என்று இலங்கை ஐக்கிய கிராம உத்தியோகத்தர் சங்கம் குற்றஞ்சுமத்தியுள்ளது.

இதுதொடர்பில் அந்தச் சங்கத்தின் தலைவர் வெளியிட்ட ஊடக அறிக்கையில் உள்ளதாவது:-

நாடளாவிய ரீதியில் கிராம அலுவலர்கள் அங்கத்துவம் வகிக்கும் இலங்கை ஐக்கிய கிராம உத்தியோகத்தர் சங்கம் மற்றும் [illegible] சங்கத்தின் [illegible] இணைந்து பல காரணங்களுக்காக நலன்புரி நன்மைகள் திட்ட விடயத்தில் விலகி தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றன. இந்தத் தொழிற்சங்க நடவடிக்கை சம்பந்தமாக அரச நிர்வாகங்கள் மற்றும் உள்ளூராட்சி மாகாணசபைகள் அமைச்சு, ஜனாதிபதியின் செயலகம், அனைத்து மாவட்ட பிரதேச செயலர்கள் மற்றும் நலன்புரிச் சபை போன்ற தரப்புகளுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கான தீர்வுக்கு நலன்புரி நன்மைகள்சபை, எமது தொழிற்சங்கம் ஆகியவை உரிய பிரிவினருடன் கலந்தாலோசித்து உடன்பாடுகள் எட்டப்படவேண்டும். இந்த விடயத்தில் தனித்து ஒரு மாவட்டச் செயலாளரோ அல்லது பிரதேச செயலாளரோ உடன்பாட்டுக்கு வருமாறு எம்மைக் கட்டாயப்படுத்த முடியாது. ஆனால் நாட்டிலுள்ள அனைத்து மாவட்டங்களிலும் இல்லாத நடைமுறைகள் யாழ்.மாவட்டத்தில் திணிக்கப்டு கின்றன.

யாழ்ப்பாணத்தில் ஒருசில பிரதேச செயலகங்களில் நாட்டின் ஏனைய பாகங்களில் நடைமுறையில் இல்லாத படிவங்களை பொதுமக்களிடம் கையளித்து, அதனை பூரணப்படுத்தி கிராமஅலுவலர்களால் உறுதிப்படுத்தி வழங்கினால்தான் உங்களுக்கு நலன்புரி நன்மைகள் கொடுப்பனவு கிடைக்கும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தச் செயற்பாட்டால் அதிகாரிகளுக்கு என்ன இலாபம்? எதற்காக இவ்வாறு நடக்கிறார்கள்? மக்கள் இதனைப் புரிந்து கொள்ள வேண்டும் - என்றுள்ளது. (ச-20)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அருகிப்போகும் நிலத்தடி நீர் பாதுகாப்பது உங்கள் பொறுப்பு

## சுவீடன் விவசாயப் பல்கலைப் பேராசிரியர் சுட்டிக்காட்டு

**யாழ்ப்பாணம், செப். 12**

**பெரிய குளங்களை அமைப்பதற்கான வாய்ப்புகள் இல்லாதபோதும் நிலத்தடி நீரே யாழ்ப்பாணத்தின் மிகப் பெரிய வரம். இந்த நிலத்தடி நீரைப் பாதுகாக்கத் தவறினால் எதிர்காலத்தில் உவர்த்தன்மை அதிகரித்து பாலைவனமாகும் ஆபத்துக்குள் தள்ளப்படுவோம் என்று சுவீடன் விவசாயப் பல்கலைக்கழக தகைநிலை பேராசிரியர் சிறிஸ்கந்தராசா தெரிவித்துள்ளார்.**

தெல்லிப்பழையிலிருந்து அராலிவரை 'வழுக்கியாற்றின் வழிதோறும் உள்ள குளங்கள் காணல்' எனும் தொனிப்பொருள் நடைபயணம் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

இந்த நடைபயணத்தில் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்; வடக்கு மாகாணமானது மழையிலிருந்து பெறப்படுகின்ற நிலத்தடி நீரைத் தங்களுடைய தேவைக்காக முற்றுமுழுதாகப் பயன்படுத்திய வரலாற்றைக் கொண்டது.

காலம் காலமாக கோயில்களை, பொது இடங்களை அண்டிய பகுதிகளில் அமைக்கப்பட்ட குளங்கள் காலநிலைக்கு ஏற்ப ஈடுகொடுத்து வந்தவையாக இருந்தாலும், கடந்த 30 ஆண்டுகளில் இந்த நீர்த்தேக்கங்கள், நீர் நிலைகள், கேணிகள் மற்றும் குளங்கள் உரிய அக்கறை செலுத்தப்படாது பேணப்படாததனால் மழைநீர் சேமிப்பின்றி பெருமளவு நீர் கடலுக்கு விரயமாகின்றது.

அத்துடன் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற நகரமயமாக்கல்களால் மழைநீர் நிலத்துக்குக் கீழ் செல்லும் அனைத்து வழிகளும் மூடப்படுகின்றன. நீரை மாசடையச் செய்யும் சூழலும் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

எனவே நீரை மாசாக்காது மழை நீரை உரிய வழியில் பாதுகாத்தால் மாத்திரமே நிலத்தடி நீரைப் பேணமுடியும். அவ்வாறு பாதுகாக்கத் தவறினால் எதிர்காலத்தில் உவர்த்தன்மை அதிகரித்து எமது மாவட்டம் பாலைவனமாக மாறநேரிடும். இதனை உணர்ந்து எச்சரிக்கையுடன் நடந்துகொள்ள வேண்டும் - என்றார். (ச)

# விசர்நோய்த் தடுப்பூசி யாழ்.நகரில் ஏற்றல்!

யாழ்ப்பாணம், செப். 12

யாழ்.மாநகரசபை எல்லைக்குட்பட்ட யாழ்.நகரப் பகுதிகளில் ...ார்ப்பு நாய்களுக்கு விலங்கு விசர் நோய்த் ...ப்பூசி ஏற்றப்படவுள்ளது என்று யாழ். மாநகர, சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனை அறிவித்துள்ளது. (ச)

| திகதி | நேரம் | ஏற்றப்படும் நிலையங்கள் |
|---|---|---|
| 18.09.2023 | மு.ப. 9.00 - மு.ப. 11.00 | அத்தியடி பிள்ளையார் கோவிலடி |
| | மு.ப. 11 .00 - பி.ப. 1.00 | ஸ்ரான்லி வீதி, பெற்றோலியக் கூட்டுத்தாபனம் முன்பாக |
| | பி.ப. 02 .30 - பி.ப. 4.00 | நாவலர் மண்டபம், நாவலர் வீதி |
| 19.09.2023 | மு.ப. 9.00 - மு.ப. 11.00 | இராசாவின் தோட்ட வீதி, ஸ்ரான்லி வீதி சந்தி |
| | மு.ப. 11 .00 - பி.ப. 1.00 | கோவில் வீதி, நக்கா வீதி சந்தி |
| | பி.ப. 02 .30 - பி.ப. 4.00 | மருதடி லேன், வைரவர் கோவிலடி |
| 20.09.2023 | மு.ப. 9.00 - மு.ப. 11.00 | நல்லூர் தெற்கு சனசமூக நிலையம் சற்பகப் பிள்ளையார் கோவிலடி |
| | மு.ப. 11.00 - பி.ப. 1.00 | நக்கா வீதி, இளம்சிங்கம் சனசமூக நிலையம் |
| | பி.ப. 02 .30 - பி.ப. 4.00 | கோவில் வீதி, ஆஸ்பத்திரி வீதி |
| 21.09.2023 | மு.ப. 9 .00 - மு.ப. 11.00 | மடம் வீதி, திருவள்ளுவர் சனசமூக நிலையம் |
| | மு.ப. 11.00 - பி.ப. 1.00 | அருள்மாதா கோவிலடி, ராசாவின் தோட்டம் |
| | பி.ப. 02 :30 - பி.ப. 4.00 | மாட்டீன் வீதி, சப்பல் வீதி சந்தி |
| 22.09.2023 | மு.ப. 9.00 - மு.ப. 11.00 | 2ம் குறுக்குத்தெரு, வேம்படி வீதி யாழ்ப்பாணம் |
| | மு.ப. 11 .00 - பி.ப. 1.00 | OLR. தேவாலயம், 4ம் குறுக்குத்தெரு |
| | பி.ப. 02 .30 - பி.ப. 4.00 | யாழ்.புகையிரத நிலைய வீதி, வைரவர் கோவிலடி |
| 25.09.2023 | மு.ப. 9.00 - மு.ப. 11.00 | கோயில் வீதி, ரயில் தண்டவாள சந்தி |
| | மு.ப. 11 .00 - பி.ப. 1.00 | ஆஸ்பத்திரி வீதி, கோயில் வீதி சந்தி |
| | பி.ப. 02 .30 - பி.ப. 4.00 | சோமசுந்தரம் வீதி |
| 26.09.2023 | மு.ப. 9.00 - மு.ப. 11.00 | பழைய பூங்கா பகுதி |
| | மு.ப. 11 .00 - பி.ப. 1.00 | சுவாஸ் லேன் |
| | பி.ப. 02 .30 - பி.ப. 4.00 | கொழும்புத்துறை வீதி, விதானையார் வீதி சந்தி |
| 27.09.2023 | மு.ப. 9.00 - மு.ப. 11.00 | சந்தனமாதா கோவில் பகுதி |
| | மு.ப. 11 .00 - பி.ப. 1.00 | கச்சேரி கிழக்கு ஒழுங்கை |
| | பி.ப. 02 .30 - பி.ப. 4.00 | குருசோ வீதி, கிறின்பில்ட வாசிகசாலை |
| 02.10.2023 | மு.ப. 9.00 - மு.ப. 11.00 | மத்தியூஸ் வீதி, சென்.சாள்ஸ் ஆரம்ப பாடசாலை |
| | மு.ப. 11.00 - மு.ப. 1.00 | காட்டுக் கந்தோர் ஒழுங்கை |
| | பி.ப. 02 .30 - பி.ப. 4.00 | கச்சேரி - நல்லூர் வீதி, நாவலர் வீதிச்சந்தி |



# சண்டிஹோமம்

யாழ்ப்பாணம், செப். 12

ஏழாலை தெற்கு களபாவோடை அருள்மிகு வசந்த நாகபூஷணி அம்மன் ஆலயத்தில் சண்டி ஹோமப் பெருவிழா எதிர்வரும் வியாழக்கிழமை காலை 6 மணி முதல் முற்பகல் 11 மணிவரை இடம்பெறவுள்ளது. (ச)

# கலாசாலை நூலகத்துக்கு நூல்கள் அன்பளிப்பு

யாழ்ப்பாணம், செப். 12

கோப்பாய் ஆசிரியர் கலாசாலை நூலகத்துக்கு ஒரு தொகுதி நூல்களை ஓய்வுபெற்ற ஆசிரியர் சின்னத்துரை பாலசுப்பிரமணியம் அன்பளிப்புச் செய்துள்ளார்.

இந்த நிகழ்வு கலாசாலையின் அதிபர் ச.லலீசன் முன்னிலையில் அண்மையில் இடம்பெற்றது.

இதன்போது, சிவாஜிகணேசன் பற்றி முனைவர் கா.வெ.செ. மருது மோகன் எழுதிய ஆய்வு நூல், கண்ணதாசனின் அர்த்தமுள்ள இந்துமதம் முழுமையான தொகுதி உள்ளடங்கலாக பல நூல்கள் அடங்கிய நூற்தொகுதி நூலக அபிவிருத்திக் குழு அங்கத்தவர்களிடம் கையளிக்கப்பட்டது. (ச)

# ஆன்மீகக் கற்கைநெறிகள்: சான்றிதழ்கள் வழங்கல்

யாழ்ப்பாணம், செப். 12

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தால் நடத்தப்படும் ஆன்மீகப் பிரசாரகர்களுக்கான சான்றிதழ் கற்கைநெறி மற்றும் ஆன்மீக பிரசாரகர் பட்டயக் கற்கைநெறி மாணவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு நாளை புதன்கிழமை காலை 7.30 மணிக்கு நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன கலா மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் ய.அநிருத்தனன் தலைமையில் இடம்பெறும் நிகழ்வில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறீசற்குணராசா பங்கேற்கவுள்ளார்.

சிறப்பு அதிதியாக புனர்வாழ்வு மற்றும் மீள்குடியேற்ற இராஜாங்க அமைச்சின் முன்னாள் செயலாளர் திருமதி சாந்தி நாவுக்கரசன் கலந்துகொள்ளவுள்ளார்.

கௌரவ விருந்தினர்களாக கோப்பாய் ஆசிரிய கலாசாலையின் முதல்வர் ச.லலீசன், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விரிவுரையாளர் சி.ரமணராஜா, கோப்பாய் ஆசிரியர் கலாசாலை விரிவுரையாளர் கு.பாலசண்முகன், சிவஸ்ரீ தி.மயூரகிரிக் குருக்கள் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ச)

# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** மனதில் உற்சாகம் பெருக்கெடுக்கும். நண்பர்களால் ஆதாயம் கிடைக்கக்கூடும். எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும். முயற்சிகளை தவிர்க்கவும்.

**இடபம்:** பல வகைகளிலும் அனுகூலமான நாள். சகோதரர்கள் ஆலோசனை கேட்டு வருவார்கள். எதிர்பார்த்த உதவி கிடைக்கும். முயற்சிகள் சாதகமாக முடியும். செலவுகளைச் சமாளித்துவிடுவீர்.

**மிதுனம்:** காரியங்களில் அனுகூலம் உண்டாகும். குடும்பத்தில் பெரியவர்களின் ஆலோசனை பயனுள்ளதாக இருக்கும். உற்சாகமாகக் காணப்படுவீர்கள்.

**கடகம்:** அவ்வப்போது மனதில் குழப்பம் ஏற்பட்டு நீங்கும். பிரச்சினைகள் ஏற்பட்டாலும் பாதிப்பு இருக்காது. எதிர்பார்த்த உதவி கிடைக்கும். சங்கடங்கள் ஏற்பட்டு நீங்கும்.

**சிம்மம்:** எதிலும் பொறுமையைக் கடைப்பிடிக்கவேண்டிய நாள். புதிய முயற்சிகளைத் தவிர்ப்பது நல்லது. மற்றவர்களுடன் பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும்.

**கன்னி:** புதிய முயற்சி சாதகமாக முடியும். காரியங்களில் அனுகூலம் உண்டாகும். கணவன் - மனைவிக்கிடையே அந்நியோன்னியம் அதிகரிக்கும். தாயின் உடல்நலனில் கவனம் தேவை.

**துலாம்:** திடீர் செலவுகள் ஏற்படும். தேவையான பணம் இருப்பதால் சமாளித்து விடுவீர்கள். காரியங்களில் அனுகூலம் உண்டாகும். புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும்.

**விருச்சிகம்:** புதிய முயற்சிகளில் ஈடுபடவேண்டாம். பிள்ளைகளின் பிடிவாதப் போக்கு வருத்தம் தரும். அலைச்சல் ஏற்படும். சங்கடங்கள் ஏற்படும். பொறுமையைக் கடைப்பிடிக்கவும்.

**தனுசு:** மகிழ்ச்சி தரும் நாள். மனவருத்தம் நீங்கி அந்நியோன்னியம் அதிகரிக்கும். மகிழ்ச்சி உண்டாகும். தந்தைவழி உறவினர்களால் வீண் செலவுகள் ஏற்படும்.

**மகரம்:** பல வகைகளிலும் அனுகூலமான நாள். சகோதரர்கள் பணம் கேட்டு நச்சரிப்பார்கள். செலவுகள் அதிகரித்தாலும் சமாளித்துவிட முடியும். பிரச்சினைகள் நீங்கும்.

**கும்பம்:** நீண்டநாள்களாக எதிர்பார்த்து ஏமாந்த பணம் இன்று கைக்கு வந்து மகிழ்ச்சி தரும். சிலருக்கு தந்தையுடன் மனக்கசப்பு ஏற்பட வாய்ப்பு உள்ளது. பிரச்சினைகள் ஏற்படும்.

**மீனம்:** சிந்தித்துச் செயற்படவேண்டிய நாள். அனுசரித்துச் செல்வது நல்லது. மற்றவர்களுடன் வீண் சர்ச்சைகளில் ஈடுபடவேண்டாம். வீட்டில் பொறுப்புகள் அதிகரிக்கும். வழிபாடு நலம் சேர்க்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாளொரு நல்வார்த்தை

சுடும்வரை தான் நெருப்பு,
சுற்றும்வரை தான் பூமி
போராடும்வரை மனிதன்;
நீ மனிதன்

- கவிஞர் வைரமுத்து -


# கொலையுண்ட குளங்கள்

வழிதோறும் உள்ள குளங்களை அடையாளப்படுத்தும் வகையில் 'நடந்தாய் வாழி வழுக்கிஆறு' என்ற தொனிப்பொருளில் தெல்லிப்பழையில் இருந்து அராலி வரையில் ஒரு நடைபயணம் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றது. ஆறுகளற்ற பூமியான யாழ்ப்பாணத்தில், தங்கள் குறையைத் தீர்க்க யாழ்ப்பாணத்தவர்கள் மழைவெள்ளம் பாய்ந்தோடும் மிகநீண்ட வாய்க்காலை 'வழுக்கியாறு' என்று அடையாளப்படுத்திக் கொண்டனர். இந்தநிலையில் எல்–நினோவின் தாக்கத்தால் வடக்கு மாகாணம் அதிலும் குறிப்பாக யாழ்ப்பாண மாவட்டம் பெரும் பாதிப்பை எதிர்கொண்டுள்ள பின்னணியில், 'எதிர்காலத் தண்ணீர்ப் பாதுகாப்பை' உறுதிப்படுத்தும் செயற்பாடுகளுக்குக் கட்டியமாக 'நடந்தாய் வாழி வழுக்கிஆறு' செயற்றிட்டம் அமைந்திருக்கின்றது .

வறட்சி உக்கிரமாகி தண்ணீர் இருப்பிழப்பு ஏற்படும்போது, தண்ணீர்ப்பற்றாக்குறை உணரப்படும்போது எங்கள் சிந்தனையும் செயற்பாடுகளும் ஏதோ அந்தப் பருவகாலத்தைக் கடத்திவிட்டாற் போதும் என்பதாகவே அமைந்திருந்தன – அமைந்திருக்கின்றன. வறட்சி வலயங்களுக்குத் தண்ணீர் விநியோகிப்பது, நீர்மின்னுற்பத்தியைக் கட்டுப்படுத்துவது, வரையறுக்கப்பட்ட நிலப் பரப்பில் மட்டுமே பயிர்ச்செய்கையை மேற்கொள்வது என்றுதான் வறட்சிக் காலத்தை எதிர்கொள்ளும் அரசாங்கத்தின் திட்டங்கள் அமைகின்றன. பொதுமக்களும் கூட இத்தகைய சிந்தனைப் பிறழ்வான திட்டங்களையே தமது தேவையாக – வறட்சி நிவாரணமாக எதிர்பார்க்கின்றனர். ஆனால், மழைக்காலத்தில் 'எதிர்காலத் தேவை கருதிய' தண்ணீர் சேமிப்புத் தொடர்பில் எவரும் சிந்தித்ததாக இல்லை. இன்னும் சொல்லப்போனால் இந்த விடயத்தில் பூர்வாங்க நடவடிக்கைகளைக்கூட நாங்கள் மேற்கொண்டதில்லை. ஆனால் இங்கே சிந்திக்க வேண்டியதும் செயலுருப் பெறவேண்டியதுமான விடயம் இதுதான்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் இன்று குளங்களைக் காண்பதென்பதே அரிதான விடயமாகிவிட்டது. இற்றைக்கு மூன்று தசாப்தங்களின் முன்னர் இருந்த நிலைமையோ வேறு. மிகப்பெரியளவிலான நீர்த்தேக்கங்களாக இல்லாவிட்டாலும் ஏராளம் சிறுகுளங்கள் வடக்கில், குறிப்பாக யாழ்ப்பாணம் எங்கும் நிறைந்திருந்தன. ஆனால் இன்று அந்தக்குளங்களில் பலவும் காணாமலாக்கப்பட்டுவிட்டன. பல குளங்கள் மண்நிரவப்பட்டு குடிமனைகளாக மாறிவிட்டன. இவ்வாறான ஏராளம் குளங்களை இல்லாமல் செய்துவிட்டு இன்று குளங்கள் இல்லை, தண்ணீர் இல்லை, வறட்சி தாண்டவமாடுகின்றது என்றால் இதில் யாரைத்தான் நோவது? எனவே வறட்சிப் பாதிப்புக்காக அரசாங்கத்தை நோக்கி எவரும் விரல்நீட்டமுடியாது. தனிமனித – சமூக செயற்பாடுகள் தான் சிறுகுளங்களை இல்லாமலாக்கின. நாம் தான் குளங்களைக் கொலை செய்து, அவற்றின்மேலே கட்டடக் காடுகளை வளர்த்தோம். இதுவே தண்ணீருக்குத் திண்டாடும் நிலையை வலிந்து ஏற்படுத்தியது. ஆதலால், இதற்குப் பிராயச்சித்தம் தேடவேண்டிய கடப்பாடும் பெரும்பொறுப்பும் எமக்கிருக்கின்றது. 'அரசாங்கம் வரும்: தீர்வு தரும்' என்ற வழக்கமான யாசகநிலை இந்த விடயத்தில் ஆகவே ஆகாது.

பொது அமைப்புகள் இல்லாத கிராமங்கள் இன்றில்லை. இன்னும் சொல்லப்போனால் ஒவ்வொரு கிராமத்திலும் குறைந்தது ஐந்து தொடக்கம் பத்து வரையிலான பொது அமைப்புகள் இருக்கவே செய்கின்றன. எனவே, குளங்களை அடையாளப்படுத்தக்கூடிய இவ்வாறான செயற்றிட்டங்களை வடக்கின் அனைத்துப் பகுதிகளிலும், கிராமங்கள்தோறும் அந்தந்தக் கிராமங்களின் பொது அமைப்புகளின் துணைகொண்டு பலப்படுத்த வேண்டும். இந்த அமைப்புகள் இணைந்து பொதுச்செயற்றிட்டத்தின் கீழ் குளங்களைத் தூய்மைப்படுத்தினாலேயே அடுத்த வறட்சிக்காலத்தை ஓரளவு திடமாக எதிர்கொள்ளக்கூடிய திராணி வடக்குக்கும் யாழ்ப்பாணத்துக்கும் கிட்டும். இன்னும் சில வாரங்களில் மழைக்காலம் ஆரம்பிக்கவுள்ளது. அதற்கு முன்னர் போர்க்கால அடிப்படையில் இந்தச் செயற்றிட்டங்கள் செய்யப்பட வேண்டும். இதன் பொறியாக 'நடந்தாய் வாழி வழுக்கிஆறு' செயற்றிட்டம் அமையட்டும்.



# அமைச்சரவையில் விரைவில் மாற்றம்

## பிரச்சினைகளைத் தீர்க்க நடவடிக்கை

**கொழும்பு, செப். 12**

**திறமையின்மை மற்றும் தகராறுகள் உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணும் வகையில், அமைச்சரவை இராஜாங்க அமைச்சர்கள் மற்றும் அமைச்சரவைச் செயலாளர்களது இடமாற்றம் விரைவில் நடைபெறும் என அரசு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.**

இந்த மறுசீரமைப்பில் அமைச்சர், இராஜாங்க அமைச்சர் கருத்து வேறுபாடுகள் உள்ள சிலர், தங்கள் இலக்குகளை அடையத் தவறிய அமைச்சர்கள் போன்ற சில அமைச்சர்கள் மாற்றப்படலாம் என தகவல் வெளியாகியுள்ளது. அமைச்சர்கள் மற்றும் அவர்களது அமைச்சுகளின் செயற்பாடுகளை மதிப்பீடு செய்த பின்னரே மறுசீரமைப்பின்போது ஒதுக்கப்படும் அமைச்சுகள் தெரிவுசெய்யப்படவுள்ளன. தமக்கு குறிப்பிட்ட கடமைகள் வழங்கப்படாமை தொடர்பில் அதிருப்தியை வெளிப்படுத்திய இராஜாங்க அமைச்சர்களின் சில பிரதிநிதித்துவங்களையும் ஜனாதிபதி கவனத்தில் எடுத்துள்ளார். (எ-இ)

# புனையப்பட்ட கதைகளை வெளியிடுகிறது சனல் 4

## குணதாச அமரசேகர கண்டுபிடிப்பு

கத்தோலிக்க வாக்குகளைப் பெற்றுக்கொள்ளும் ஒரே நோக்கத்தில்தான் சனல்-4 ஊடக நிறுவனம் வெளியிட்டுள்ள புனையப்பட்ட வீடியோ தொடர்பில் சர்வதேச விசாரணையை எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ கோருகின்றார். இந்த நிறுவனம் கோத்தாபயவுக்கு எதிராக மட்டுமல்ல ஒட்டுமொத்த சிங்கள, பௌத்தத்துக்கு எதிராகவே பரப்புரை செய்கின்றது - என்று தேசிய அமைப்புகளின் சம்மேளனத்தின் தலைவர் கலாநிதி குணதாச அமரசேகர தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

முன்னாள் ஜனாதிபதி கோத்தாபயவுக்கு அளிக்கப்பட்ட 69 வாக்குகளில் 9 லட்சமானவையே கத்தோலிக்க வாக்குகளாக உள்ள நிலையில் அந்த வாக்குகள் கிடைக்காதுவிட்டால்கூட அவர் வெற்றி பெற்றிருப்பார் என்பதை சனல்-4 தெரிந்து கொள்ள வேண்டும். சனல்-4 ஊடக நிறுவனம் எமது நாட்டின் அரச தலைவர்கள் மற்றும் இராணுவத்தினர் சம்பந்தமாக தொடர்ச்சியாக எதிர்மறையான விடயங்களையே வெளியிட்டு வருகின்றது.

அதுவொரு நிகழ்ச்சி நிரலின் அடிப்படையிலேயே செயற்படுகின்றது. எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ சர்வதேச விசாரணையைக் கோரியுள்ளார். அதற்கு அரசாங்கமும் தயார் என்று அறிவித்திருக்கின்றது. இந்தச் செயற்பாடு இராணுவத்தைக் காட்டிக் கொடுக்கும் முயற்சியாகும் - என்றார். (எ-இ)

நாளை 13.09.2023 புதன்கிழமை ஆவணி 27

| | |
|---|---|
| சுபநேரம் | : 04.33 – 06.03 |
| ராகுகாலம் | : 12.03 – 01.33 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பெயர் மாற்றம்

10 வீட்டுத்திட்டம் மாயவனூரில் வதியும் **குப்பமுத்து சிவகாமி** ஆகிய நான் எனது பெயரை **குப்பமுத்து அமினா உம்மா** என மாற்றம் செய்வதோடு இனிவரும் சகல ஆவணங்களிலும் **குப்பமுத்து அமினா உம்மா** என்றே கையொப்பமிடுவேன் என்று இலங்கை சோசலிச குடியரசு மக்களுக்கு தெரியப்படுத்துகின்றேன்

**குப்பமுத்து அமினா உம்மா**

(cs 25662) (N-1)

## ST. JOHN'S COLLEGE, JAFFNA VACANCY

Applications are hereby invited from qualified persons for the following vacancy:

- Teacher Science (English Medium) Gr 6-11

Please send your complete CV with the contact details of two non-related referees by registered post to reach before 20th September 2023 to the address below:

**The Principal**
**St. John's College, Jaffna.**

(cr 40557) (N.1)

## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலையின் முன்னை நாள் ஓய்வுநிலை ஆசிரியர்

**சுப்பிரமணியம் கனகசபாபதி**

அவர்களின் இழப்பினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எங்கள் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

மலர்வு **26.07.1929** உதிர்வு **13.08.2023**

**பாடசாலைச் சமூகம்**
**யா/ கைதடி சேதுகாவலர் வித்தியாலயம்**
**கைதடி மத்தி.**

(CS 26192)A-1

## 13 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 28 . 06 . 1954



மறைவு 06 . 09 . 2010

**அமரர் நடராஜா கனகலிங்கம்**

(மர அரிவு காலை, மரக்காலை உரிமையாளர்)

வளர்த்தெடுத்து அறிவூட்டி ஆளாக்கி வைத்துவிட்டு
அவசரமாய் ஏன் அப்பா அவனிவிட்டு சென்றீர்கள்
ஆண்டு ஒன்றென்ன ஆயிரந்தான்
கடந்தாலும் ஆறாது எம் இதயம்

**ஓம் சாந்தி ! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி !!!**

**42/1, அராலி வீதி, ஓட்டுமடம் யாழ்ப்பாணம்.**

**உங்கள் பிரிவால் துயருறும் குடும்பத்தினர்**

(cs 1113) (2.6)

# தெய்வீக சுகானுபவம் நல்லூரில் ஆரம்பம்

யாழ்ப்பாணம், செப். 12

வடக்கு மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் பண்பாட்டலுவல்கள் அலகு யாழ். இந்தியத் துணைத்தூதரகத்துடன் இணைந்து நடத்திய தெய்வீக சுகானுபவம் 9 நிகழ்வு நேற்று முன்தினம் நல்லூர் சங்கிலியன் தோப்பில் ஆரம்பமானது.

நிகழ்வை இந்தியக் கலைஞர்களான புல்லாங்குழல் விற்பன்னர் ஜே.ஏ.ஜெயந்த், வயலின் விற்பன்னர் பி. அனந்தகிருஷ்ணன் ஆகியோர் தமது இசையால் அலங்கரித்து சிறப்பித்தனர். இந்த நிகழ்வில் உள்ளூர்க் கலைஞர்களான ச. விமல் சங்கர், க. கஜன், பி.எஸ். செந்தில்நாதன் ஆகியோர் அணி செய் கலைஞர்களாக இணைந்து சிறப்பித்திருந்தனர். உள்ளூர்க் கலைஞர்களின் வரவேற்பு நடனம், வீணை இசை ஆகியனவும் இடம்பெற்றன.

நிகழ்வில் வடக்கு மாகாண ஆளுநர் மற்றும் யாழ். இந்தியத் துணைத் தூதுவர் ஆகியோர் பிரதம விருந்தினர்களாகவும், பிரதம செயலாளர், யாழ் மாவட்ட அரசாங்க அதிபர் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்து சிறப்பித்திருந்தனர். யாழ். மாநகரசபை ஆணையாளர், மாகாணக் கல்விப் பணிப்பாளர், ஏனைய திணைக்களப் பணிப்பாளர்கள், கல்வி அமைச்சின் உத்தியோகத்தர்கள் மற்றும் பொதுமக்கள் எனப் பலர் கலந்துகொண்டனர். (எ-இ)

## பெயர்மாற்றம்

வரணி இயற்றாலையில் வசிக்கும் **சி.செல்லமணி** ஆகிய நான் எனது பெயரை இன்றுமுதல் **சி.செல்வரதி** என மாற்றம் செய்வதோடு இனிவரும் சகல ஆவணங்களிலும் **சி.செல்வரதி** என்றே கையொப்பம் இடுவேன் என இலங்கை சோசலிச குடியரசு மக்களுக்கு தெரியப்படுத்துகின்றேன்.

(cr.40555) (n.1)

**சி.செல்வரதி**

## சிறுவர் இல்லத்தில் சிறுவர்கள் மேற்பார்வை பணிக்கு பணியாளர்கள் தேவை

கிளிநொச்சி ஜெயந்திநகர் பகுதியில் அமைந்துள்ள மகாதேவா சுவாமிகள் சிறுவர் இல்லத்தில் சிறுவர்களை மேற்பார்வை செய்து அவர்களை சிறப்பாக வழிநடத்தும் பணிக்காக 25 தொடக்கம் 60 வயதிற்கு உட்பட்ட பெண் பணியாளர்கள் தேவையாக உள்ளது.

விரும்பமுடைய விண்ணப்பதாரிகள் **எதிர்வரும் 17 ஆம் திகதி அல்லது 18.09.2023 ஆகிய (சனி, ஞாயிறு)** திகதிகளில் தங்களின் சுயவிபரக்கோவையுடன் பின்வரும் முகவரியில் அமைந்துள்ள எமது அலுவலகத்திற்கு முற்பகல் 11.00 மணி தொடக்கம் பிற்பகல் 2.00 மணிக்கு முன்னர் நேரில் சமுகமளிக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**அலுவலக முகவரி:**
**மகாதேவா சுவாமிகள் சிறுவர் இல்லம்**
**ஜெயந்திநகர், கிளிநொச்சி.**
**077 324 0950, 021 492 3118**

**ச.மோகனபவன்**
**தலைவர்,**
**மகாதேவா சுவாமிகள் சிறுவர் இல்லம்.**

(cr.37124) (2.6)

## மரண அறிவித்தல்

தோற்றம் 07 . 04 . 1948



மறைவு 11 . 09 . 2023

### செல்லத்துரை சிவபாதம்

இணுவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும் வட்டுவினி இணுவில் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லத்துரை சிவபாதம் நேற்று (11.09.2023) திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை பொன்னம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற தம்பு சரஸ்வதி தம்பதியரின் அன்பு மருமகனும், சர்வலோகேஸ்வரியின் அன்புக் கணவரும், தளையசிங்கம் (ஜேர்மனி), கருணாகரன் ஆகியோரின் அன்புச் சகோதரனும், அருந்தவலட்சுமி (ஆசிரியர் - யா/ இணுவில் மத்திய கல்லூரி), திருச்செந்தூரன் (நியூஸிலாந்து), மணிமாறன் (ஆசிரியர் - யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி), மணிவண்ணன் (ஆசிரியர் - யா / ஊர்காவற்றுறை கரம்பொன் சிறிய புஸ்பம் மகளிர் வித்தியாலயம்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், உதயகுமார் (கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் - மன்னார்), கவிதா (நியூஸிலாந்து), வேணுசா (சமூக பாதுகாப்பு உத்தியோகத்தர் - யாழ்.மாவட்டச் செயலகம்), இசைப்பிரியா (ஆசிரியர் - யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி) ஆகியோரின் மாமனாரும், அபிஷா, கேதுசன், சோபிகா, அக்ஷரா, ஆதுரி, ஆத்விக், ஆருத்ரி, ஆதிரா, ஆதித்ரன் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (13.09.2023) புதன்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக காரைக்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்பு: **077 113 3013**
**077 362 8195**

**தகவல்: குடும்பத்தினர்**

(cs 52053) (N-1)

## வலிகாமம் கிழக்கு பிரதேச சபை 2024 ஆம் ஆண்டிற்கான வரவு - செலவுத் திட்டம் தயாரிப்பதற்கான முன்மொழிவுகள் கோரல்

எமது சபையின் 2024 ஆம் ஆண்டிற்கான வரவு - செலவுத் திட்டம் தயாரிக்கும் பொருட்டு, வலிகாமம் கிழக்கு பிரதேசசபை எல்லைக்குள் பிரதேசசபையினால் மேற்கொள்ளப்பட வேண்டிய அபிவிருத்தி வேலைக்கான முன்மொழிவுகள் பொதுமக்கள் மற்றும் சமூக மட்ட அமைப்புகளிடமிருந்து கோரப்படுகின்றது. எனவே மேற்கொள்ளவேண்டிய அபிவிருத்தி வேலைகளின் முன்மொழிவுகளை 2023.09.25 ஆம் திகதி திங்கட்கிழமைக்கு முன்னர் எமது தலைமை அலுவலகத்திற்கு கிடைக்கக்கூடியவாறு நேரடியாகவோ அல்லது தபால் மூலமாகவோ சமர்ப்பிக்கமுடியும். மேலும் கிடைக்கப்பெறும் முன்மொழிவுகளில், சபையின் நிதி நிலைமைக்கு ஏற்ப முன்னுரிமை அடிப்படையில் மேற்கொள்ளப்பட வேண்டிய வேலைத்திட்டங்கள் பாதீட்டில் உள்ளடக்கப்படும் என்பதனை அறியத்தருகின்றேன்.

**செயலாளர்,**
**வலிகாமம் கிழக்கு பிரதேசசபை,**
**புத்தூர்.**

(CR 40...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# YARL SMART (Pvt) Ltd

**எமது வாடிக்கையாளர்களுக்கான அரிய வாய்ப்பு.**
நீங்கள் உங்கள் அயலவர்கள். நண்பர்களுக்கு எமது நிறுவனத்தைப்பற்றி தெரியபடுத்தி அவர்களும் எமது Water Fillter பொருத்தினார்கள் என்றால் அன்பான வாடிக்கையாளரான உங்களுக்கு 1 வருடத்திற்குரிய Sediment Fillter (6ps ) இலவசமாக தரப்படும்.

* One Year Warranty For All Electronic Parts.
* Life Time Free Service Warranty
* Free Water Testing.
* Freely Available Spare Parts
* 24 Hours Breakdoewn Service.




More Information call us
**021 430 0044 /076 666 5267**


# 31 ஆம் நாள் வீட்டுக்கிருதிய அழைப்பு



கடந்த 14.08.2023 அன்று சிவபதமடைந்த
எங்கள் குடும்பத்தலைவி

## அமரர்
## சர்வலோகநாதன் செல்லம்மா

அவர்களின் 31 ஆம் நாள் கிரியைகள் நாளை (13.09.2023) புதன்கிழமை காலை 4.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, அஸ்தி கீரிமலை புனித தீர்த்தக்கரையில் கரைக்கப்படும். அதனைத் தொடர்ந்து முற்பகல் 11.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற உள்ள ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மயிலியதனை,
தொண்டைமானாறு.

குடும்பத்தினர்

(cr 40553) (N.1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெஞ்சகலா ஒன்பதாம் ஆண்டு நினைவலைகள்

மலர்வு 03 . 12 . 1939



உதிர்வு 22 . 08 . 2014

## அமரர் செல்லையா மகேஸ்வரன்

(ஸ்தாபகர் ஜெவ்னா எலக்ரிக்கல்ஸ், மகேஸ் அன் சன்ஸ்)

திதி : அபரபட்ச திரியோதசி (12.09.2023)

அன்பின் திருவுருவமே! பண்பின் உறைவிடமே!
எங்களுக்கெல்லாம் அன்பு காட்டி அரவணைத்த
எம் அன்புத் தெய்வமே!
நீங்கள் எங்களை விட்டுப் பிரிந்து ஒன்பது ஆண்டுகளல்ல
எத்தனை ஆண்டுகள்தான் சென்றாலும்
உங்கள் நினைவுகள் எங்கள் நெஞ்சங்களை விட்டு
என்றும் அகலாது!

உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்,

127/6, கோயில் வீதி,
யாழ்ப்பாணம்.

மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

(cs.46401) (N.1)

# முதலாம் ஆண்டு நினைவு நாள்

பிறப்பு 17 - 11 - 1939



இறப்பு 25 - 08 - 2022

யாழ். எழுதுமட்டுவாழ் தெற்கு விழுபளையைப் பிறப்பிடமாகவும்
தட்டான்குள வீதி, மீசாலை வடக்கு கொடிகாமத்தை வதிவிடமாகவும் கொண்ட

## அமரர் தம்பிஐயா நடேசபிள்ளை

அவர்களின் முதலாம் ஆண்டு நினைவு நாள்

கண்முன்னே வாழ்ந்த காலம்
கனவாகிப் போனாலும்
எங்கள் முன்னே உங்கள் முகம்
எந்நாளும் உயிர்வாழும்
மண் விட்டு மறைந்து
நீங்கள் விண்ணோக்கிச் சென்று
ஓர் ஆண்டு தான் சென்றாலும்
கண்விட்டு மறையாது
உங்கள் நினைவுகள்

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

அன்னாரின் முதலாம் ஆண்டு நினைவுநாள் (12.09.2023) செவ்வாய்க் கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற இருக்கும் மதியபோசன விருந்துபசாரத்தில் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

குடும்பத்தினர்.
0777 36 7278

CR 40528 (A-1)

# இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 29 . 12 . 1943



மறைவு 04 . 09 . 2021

## அமரர் அண்ணாமலை குலசிங்கம்

(குலசி - பிரகாஸ் ரான்ஸ்போட் - உரிமையாளர்)

திதி: துவாதசி

ஆண்டு இரண்டு ஆனதுவோ
உங்கள் முகம் கண்டு ஆறவில்லை நம் இதயம்
அன்பும் பாசமும் நிறைந்த பொக்கிஷம் நீங்கள்
நித்தம் புலம்புகின்றோம் உங்கள்
- திருமுகம் காணாமல்
ஆறவில்லை எங்கள் துயர்
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை
பிரார்த்திக்கின்றோம்.


கொக்குவில் கிழக்கு,
யாழ்ப்பாணம்.

(cs 52055) (N.1)

நினைவுகளுடன்
குடும்பத்தினர்.

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

நானே உயிர்த்தெழுதலும் ஜீவனுமாயிருக்கிறேன் என்னை
விசுவாசிக்கிறவன் மரித்தாலும் பிழைப்பான் (யோவான் 11.25)



அன்னை மடியில் 05.04.1953

ஆண்டவன் அடியில் 12.09.2022

## அமரர் திரு. சேனாதிராஜா ஒவ்றாட் சுகுணராஜ்

(ஓய்வுபெற்ற நிர்வாக உத்தியோகத்தர் -
பிரதேசசபை, சுன்னாகம், யாழ்ப்பாணம்)

நித்திய இளைப்பாற்றுதலடைந்த
எமது தந்தையாரின் ஆன்மா சாந்தியடைய
பிரார்த்திக்கின்றோம்

என்றும் நீங்காத நினைவுகளுடன்
குடும்பத்தினர்
076 977 7288

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கைதிகள் தினத்தை முன்னிட்டு உடல், மன வளர்ச்சி திட்டங்கள்!

சிறைக்கைதிகள் தினத்தை முன்னிட்டு கைதிகளின் உடல், மன மற்றும் ஆன்மீக வளர்ச்சியை ஊக்குவிக்கும் வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்படும் என்று சிறைச்சாலைகள் திணை க்களத்தின் ஊடகப் பேச்சாளர் சந்தன ஏக்கநாயக்க தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது -

இந்த வேலைத் திட்டங்கள் ஒவ்வொரு வருடமும் நடக்கின்றன. இந்த ஆண்டும் அவற்றைச் செயற்படுத்த சிறைச்சாலைகள் திணைக்களத்தின் புனர்வாழ்வுப் பிரிவு ஏற்பாடு செய்துள்ளது. சர்வ மத நிகழ்வுகள், சுகாதார வேலைத் திட்டங்கள், விளையாட்டு மற்றும் ஆளுமை நிகழ்ச்சிகள், கல்வி மற்றும் போதனை நிகழ்ச்சிகள், குடும்ப சந்திப்புகள், பொழுதுபோக்கு நிகழ்ச்சிகள், போதைப்பொருள் ஒழிப்பு தொடர்பான வேலைத்திட்டங்கள், கலாசார நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன - என்றார். (எ-இ)


### கடை வாடகைக்கு



கிளிநொச்சி A9 கண்டி வீதியில் பொது மருத்துவமனையில் இருந்து 400m தூரத்தில் 45 x 16 அடி நீள அகலமுடைய இரண்டு கடைகள் (பிளாட்) சகல வசதிகளுடன் வாடகைக்குண்டு.

தொடர்பு: 077 807 1049, 077 012 3145



### மாபிள் வேலை

உங்கள் வீடுகளுக்கு தரமான முறையில் மாபிள் பதித்து தரப்படும்.

இழுத்து பதிக்க ஒரு சதுர அடி - 85 ரூபா

077 334 1281



### மணமகள் தேவை

1985 ஆம் ஆண்டு பிறந்த கனடா பிரஜாவுரிமையுடைய விவாகரத்துப்பெற்ற மணமகனுக்கு மணமகள் தேவை.

074 328 6189

(cs.52056) (N.1)


# தோட்ட மக்களின்மீது தொடர்கிறது தாக்குதல்



கொழும்பு, செப். 12

இரத்தினபுரி, வெள்ளந்துர தோட்டத்தில் குடியிருப்பு ஒன்று நேற்றுமுன்தினம் கும்பல் ஒன்றால் சேதப்படுத்தப்பட்டுள்ளது. இந்தச் சம்பவத்துக்கு தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் கடும் கண்டனங்களைத் தெரிவித்துள்ளார்.

அவர் தெரிவித்துள்ளதாவது:-

இலங்கை ஐ.நா. பிரதிநிதிக்கு இது தொடர்பாகத் தகவல் அனுப்பினேன். பொலிஸாரைப் போன்றே, நீதிமன்றக் கட்டளை உள்ளது என்றும் நடித்து அப்பாவிகளின் வீட்டை உடைக்கும் காடையர்கள் இவர்கள் என பெருந்தோட்ட அமைச்சர் ரமேஷ் பத்திரணவிடம் சொன்னேன். ஒவ்வொருமுறையும் சம்பவம் நடக்கிறது. நாம் கேள்வி எழுப்புகிறோம். நீங்கள் பதில் கூறுகிறீர்கள். அல்லது ஓர் அரசாங்க அரசியல்வாதியை அங்கே அனுப்பி அதன்பின் ஒளிந்து கொள்கிறீர்கள். இதற்குத் தீர்வு தான் என்ன? என்று பெருந்தோட்ட அமைச்சர் ரமேஷ் பத்திரணவிடம் கேட்டேன். இந்தக் கம்பனிக்காரர்களுடன் பணியாற்ற முடிய வில்லை. ஜனாதிபதியிடம் பேசி முழுமையான தீர்வைத் தேடுவோம் என ரமேஷ் பத்திரண பதிலளித்தார் - என்றார். (எ-26)

## 3 லட்சம் ரூபா இழப்பீடு; ஞானசாரருக்கு விதிப்பு

கொழும்பு, செப். 12

2014இல் கொழும்பு நிப்பான் ஹோட்டலுக்குள் அத்துமீறி பிரவேசித்த ஜாதிக பல சேனா வடரேக விஜித தேரர் ஏற்பாடு செய்திருந்த ஊடகவியலாளர் மாநாட்டுக்கு இடையூறு விளைவித்தமை தொடர்பில் கொழும்பு கோட்டை நீதிவான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் கலகொட அத்தே ஞானசார தேரர் உள்ளிட்ட 7 பேர் குற்றத்தை ஒப்புக் கொண்டனர். முறைப்பாடு செய்த தரப்பினருக்கு ஞானசார தேரர் உள்ளிட்டோர் 3 இலட்சம் ரூபா நட்டஈடு வழங்குமாறு உத்தரவிடப்பட்டதுடன், மீண்டும் இவ்வாறான குற்றங்களைச் செய்யக்கூடாது என கோட்டை நீதிவான் திலின கமகே அவர்களைக் கடுமையாக எச்சரித்தார். (அ-ஒ-இ)





கொமர்ஷல் வங்கியின் Digital Banking வசதியுடன் வாழ்க்கையை மகிழ்ச்சியுடன் களித்திடுங்கள். உங்கள் சகல வங்கித் தேவைகளையும் உடனுக்குடன் நிறைவேற்றித் தந்து, நாம் அனைத்து சந்தர்ப்பங்களிலும் உங்களுடன் இருப்போம்.

**கொமர்ஷல் வங்கியின் Digital Banking உடன் POWER TO YOU!**

ComBank Digital Online Banking | Payment App | Digital Bank Account | LEAP GLOBALLINKER Online Business Ecosystem

COMMERCIAL BANK

உங்கள் நலனே எங்கள் நோக்கம்

Fitch Rating A (lka) | +94 112 353 353 | www.combank.lk


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சம்பந்தனை....

மஹிந்த ராஜபக்ச அவ்வாறு செய்ய வில்லை என்று பொதுஜன பெரமுன கட்சி யின் மூத்த நாடாளுமன்ற உறுப்பினரான காமினி லொக்குகே தெரிவித்துள்ளார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் பிரதான சூத்திரதாரிகள் என 'சனல்- 4 'ஆவணப் படத்தில் குற்றஞ்சாட்டப்பட்டுள்ள சந்தேக நபர்கள் உடனடியாகக் கைது செய்யப்பட வேண்டும். அவர்கள் சர்வதேச விசார ணைக்கு உட்படுத்தப்பட வேண்டும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் கருத்து வெளியிட்டிருந் தார். மொட்டுக் கட்சியின் ஊடக சந்திப்பு கொழும்பில் நேற்று நடைபெற்றது. இதன்போது சம்பந்தனின் கூற்று தொடர் பில் கருத்து வெளியிட்ட காமினி லொக்குகே, 'சனல் - 4 பற்றியே இன்று அதிகம் கதைக் கப்படுகின்றது. குற்றஞ்சாட்டப்பட்டுள்ள அனைவரும் கைது செய்யப்பட வேண்டும் என சம்பந்தனும் கருத்து வெளியிட்டுள் ளார், போர் முடிவடைந்த பின்னர் தாங்கள் கைது செய்யப்பட்டிருக்க வேண்டும் என் பதை சம்பந்தன் மறந்துவிட்டார். ஜனநா யகத்தைப் பாதுகாப்பதற்காக அவர்கள் தொடர்பில் அப்போது ஜனாதிபதியாக இருந்த மஹிந்த ராஜபக்ச எந்தவொரு நடவடிக்கையையும் எடுக்கவில்லை. புலி களுடன் இவர்கள் (சம்பந்தன்) கைகோர்த் திருந்தனர். ஆனால், அவர்களின் தலை வரான அமிர்தலிங்கத்தையும் புலிகள் கொலை செய்தனர்.

'சனல் - 4 'என்பது எமது நாட்டுக்கு எதிராக போலியான தகவல்களை வெளியிடும் நிறுவனம், எனவே, சர்வதேச விசாரணை அல்ல எந்த விசாரணையையும் நடத்தட் டும். பௌத்த தலைவரை ஜனாதிபதியாக்கு வதற்கு முஸ்லிம் இளைஞர்கள் தற் கொலை செய்துகொள்வார்களா? ராஜபக் சக்கள் தொடர்பில் மக்கள் மத்தியில் வெறுப்புணர்வை ஏற்படுத்தவே இப்படி யான நடவடிக்கை இடம்பெறுகின்றது என் றார் - காமினி லொக்குகே. (அ-ஓ-44)

கொழும்பு.....

போதனா மருத்துவமனைக்கு இன்று வருகை தரவுள்ளனர் என்று தெரிவிக்கப் படுகின்றது.

காய்ச்சல் காரணமாக தனியார் மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டு பின்னர் யாழ்ப் பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட 8 வயதுச் சிறுமியின் கை மணிக்கட்டுடன் அகற்றப்பட்டது. சிறுமி யின் கையில் போடப்பட்ட 'கனுலா' மற்றும் அவருக்கு கொடுக்கப்பட்ட நோய் எதிர்ப்பு மருந்து செறிவூட்டப்படாமல் ஏற்றப்பட்ட மையாலேயே கையை அகற்றவேண்டி வந்ததாக பெற்றோர் குற்றம் சுமத்தி பொலி ஸில் முறைப்பாடு மேற்கொண்டு, வழக்கு நடவடிக்கை இடம்பெற்று வருகின்றது.

இந்த நிலையில் சம்பவம் தொடர்பில் முழு மையான விசாரணையை நடத்துவதற் காக கொழும்பு சுகாதார அமைச்சை சேர்ந்த 5 அதிகாரிகள் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு இன்று வருகை தந்து விசாரணை நடத்தவுள்ள னர். (அ-ஓ-5)

நல்லூர்....

மணியளவில் நடைபெறவுள்ளது.

ஆலயத்தின் சப்பறத் திருவிழா இன்று செவ்வாய்க்கிழமை மாலை 4.45 மணிய ளவிலும், தீர்த்தத் திருவிழா நாளை மறுதினம் வியாழக்கிழமை காலை 6.15 மணியளவிலும், கொடியிறக்கத் திருவிழா அன்றையதினம் மாலை 5 மணியளவி லும், பூங்காவனத் திருவிழா எதிர்வரும் 15ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 4.45 மணியளவிலும் இடம்பெறும். (அ-ஓ-66)


## வேலையாட்கள் தேவை

யாழ். கொழும்பு அதி சொகுசு பேரூந்து சேவையின் யாழ்ப்பாண அலுவலகத்திற்கு சிட்டை எழுதுநர் தேவை. ஆண்கள் மட்டும் தொடர்பு கொள்ளவும். தொடர்புகளுக்கு:

**0777 114 226**


## மரண அறிவித்தல்

தோற்றம் 23 . 05 . 1983



மறைவு 11 . 09 . 2023

### நடராசா சதீஸ்வரன்

அச்செழுவை பிறப்பிடமாகவும் சரசாலையை வசிப்பிடமாகவும் கொண்ட நடராசா சதீஸ்வரன் அவர்கள் நேற்று (11.09.2023) திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நடராசா பரமேஸ்வரி தம்பதியரின் பாசமிகு மகனும், தர்மகுலசிங்கம் ஈஸ்வரி தம்பதியரின் அன்பு மருமகனும், தவறஞ்சினியின் அன்புக் கணவரும், சந்திரகுமார், திபாகிரி (ஆசிரியர் யா/அச்செழு சைவப்பிரகாச வித்தியாலயம்), சுதாகரி, குமுதினி, தவநேசன், விஜிதரன் (அபிவிருத்தி உத்தி யோகத்தர், கிராம அபிவிருத்தி திணைக்களம், நெடுந்தீவு பிரதேச செயலகம்) ஆகியோரின் பாசமிகு சகோதரனும், சசிரதன், ரவீந்திரன், கேமவதனா, சிவாநந்தினி, தனீஸ், தாரணி, தஷா ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.09.2023) செவ்வாய்க்கிழமை அவர்து அச்செழு இல்லத்தில் நடைபெற்று, பிற்பகல் 3.00 மணியளவில் பூதவுடல் தகனக் கிரியைக்காக அச்செழு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்: குடும்பத்தினர்.

(CS 28194) A-1

# அதிகாரிகளின் தவறுகளை போட்டுக்கொடுக்க 1905

மாவட்ட மற்றும் பிரதேச செயலகங்கள் மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சின் கீழ் வரும் ஏனைய நிறுவனங்களின் அதி காரிகள் தொடர்பான முறைப்பாடுகளை முறைப்பாடு செய்வதற்கு விசேட தொலை பேசி இலக்கம் அறிமுகப்படுத் தப்பட்டுள்ளது.

பொதுமக்கள் '1905' என்ற இலக்கத்தின் ஊடாக முறைப்பாடுகளை மேற்கொள்ள முடியும் என உள்நாட்டலுவல்கள் இரா ஜாங்க அமைச்சர் அசோக பிரியந்த தெரி வித்துள்ளார். முறைப்பாடுகளுக்குத் தீர்வு காண கூடுதல் செயலாளர் தலைமையில் சிறப்புக் குழு நியமிக்கப்பட்டுள்ளது. பொதுமக்களால் முன்வைக்கப் படும் விட யங்களுக்கு உடனடியாகத் தீர்வு காண வேண்டும் என்று புலனாய்வு அதிகாரிக ளுக்கு பணிப்புரை வழங்கப்பட்டுள்ளது என்று இராஜாங்க அமைச்சர் அசோக பிரியந்த தெரிவித்துள்ளார். தனித்தனி யாக, மாவட்ட மற்றும் பிரதேச செயலகங் களில் உள்ள வெற்றிடங்களை உடனடி யாக நிரப்புவதற்கு தீர்மானிக்கப்பட் டுள் ளது. தற்போது நடைபெறும் நேர்காண லின் போது தகுதியான நபரைத் தேர்ந்தெ டுத்து வெற்றிடங்கள் நிரப்பப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. (எ-இ)

## மரண அறிவித்தல்

தோற்றம் 08 . 08 . 1937



மறைவு 11 . 09 . 2023

### சிதம்பரபிள்ளை சின்னத்துரை

மயிலிட்டி வடக்கினை பிறப்பிடமாகவும் சுன்னாகம் பருத்திக்கலட்டியினை வதிவிட மாகவும் கொண்ட சிதம்பரபிள்ளை சின்னத்துரை அவர்கள் நேற்று (11.09.2023) இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிதம்பரபிள்ளை உமையாத்தை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற சின்னையா பார்வதி தம்பதியரின் அன்பு மருமகனும், தங்கரத்தினத்தின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்க ளான வைத்திலிங்கம், சின்னத்தம்பி, இராசதுரை, வள்ளியம்மை, மூத்ததம்பி, மீனாம்பாள், தர்மலிங்கம், தெய்வானை ஆகியோரின் பாசமிகு சகோதரனும், சிவமைந்தன் (Diamond நிறுவன மாவட்ட விநியோகஸ்தர்-KPM, விஷ்ணு பான்சி உரிமையாளர்), சிவரூபி, சிவமோகன் (Prima நிறுவன விநியோகஸ்தர் - MM Brothers) ஆகியோரின் பாசமிகு தந்தையும், விவிதா, திருப்பதி, நளினி ஆகியோரின் பாசமிகு மாமனாரும், சிவனுஜன், சஸ்மியா, லருஸ், தர்சிகன், யதுசனா, கோபேஸ் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (12.09.2023) செவ்வாய்க்கிழமை பருத்திகலட்டி சுன்னாகத்தில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் நண்பகல் 12.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கொத்தியாலடி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை, உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளு மாறு கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள்.

தகவல்: குடும்பத்தினர்
077 7900 685
077 236 7426

(CR 40559) A-1

## யாழில் தீவிரமாகின்றது வறட்சி: தண்ணீர் வழங்கலில் மட்டுப்பாடு

சாவகச்சேரி, செப். 12

கிணறுகளின் நீர்மட்டம் வேகமாகக் குறைந்து வருவதால் பொதுமக்களுக்கான குடிதண்ணீர் விநியோகம் நெருக்கடிக்கு உள்ளாகியுள்ளது என்றும் சாவகச்சேரி நகரசபையால் வழங்கப்பட்டுவரும் குடிதண்ணீர் விநியோகம் தற்போது மட்டுப்ப டுத்தப்பட்ட அளவிலேயே தினமும் நடைபெறுகின்றது என தெரிவிக்கப்படுகின்றது.

நகரசபை வளாகத்தில் உள்ள கிணற்றின் மூலம் நகரசபைச் சுற்றுவட்டாரத்தில் உள்ள அனைத்து வீதிகளிலும் சுமார் ஒரு கிலோமீற்றர் தூரத்துக்குக் குழாய்கள் பொருத்தப்பட்டு இதுவரை குடிதண்ணீர் விநியோகம் மேற்கொள்ளப்பட்டது. தற் போது கிணற்றின் நீர்மட்டம் குறைந்துள்ளதால் குடிதண்ணீர் விநியோகம் மட்டுப்ப டுத்தப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது. (எ-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மனித உரிமை....

அத்தோடு இலங்கையின் நிகழ்காலத்தையும் எதிர்காலத்தையும் பாதுகாப்பதில் பொறுப்புக்கூறல் அவசியம் என்றும் அவர் இதன்போது குறிப்பிட்டுள்ளார். உண்மையைத் தேடுவது மட்டும் போதாது என்றும் பொறுப்புக்கூறலுக்கான தெளிவான அர்ப்பணிப்புடன் செயற்படவேண்டும் என்றும் ஐ.நா. மனித உரிமைகள் பிரதி ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகத்தின் சாட்சியங்களைச் சேகரிக்கும் பொறிமுறையிடம் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் உள்ள நாடுகள் உட்பட சில தரப்புகள், இலங்கையில் மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டதாகக் குற்றம்சுமத்தப்பட்டுள்ள 10 பேர் தொடர்பான தகவல்களைக் கோரியுள்ளதாகவும் குறிப்பிட்டார்.

அவரது உரையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருந்ததாவது:-

ஆழமான அரசியல் மற்றும் ஜனநாயக சீர்திருத்தங்களைக் கோரி போராட்டம் இடம்பெற்று ஒரு வருடத்துக்குப் பிறகும், நீண்டகால சவால்களை எதிர்கொள்வதற்காக நாம் எதிர்பார்த்த மாற்றம் இன்னும் நிறைவேறவில்லை.

உள்ளூராட்சித் தேர்தலை நடத்துவதில் ஏற்பட்டுள்ள தாமதம் மற்றும் 13ஆவது திருத்தத்தின் கீழ் மாகாணசபைகளை மறுசீரமைப்பதில் ஏற்பட்டுள்ள தாமதம், அரசியல் பங்கேற்பதற்கான மக்களின் உரிமையையும் வாக்காளர்களின் சுதந்திரமான கருத்துகளையும் மட்டுப்படுத்தியுள்ளது.

பொருளாதார நெருக்கடி, சீர்திருத்த நடவடிக்கைகளுக்கு மத்தியில் இராணுவ மயமாக்கல் நடவடிக்கை, வடக்கு மற்றும் கிழக்கில் நிலங்களைக் கையகப்படுத்தும் நடவடிக்கைகள் மற்றும் பௌத்த பாரம்பரியத்தைப் பாதுகாத்தல் என்ற போர்வையில் நடைபெறும் விடயங்கள் பதற்றத்தை ஏற்படுத்தியுள்ளன.

பாதிக்கப்பட்டவர்கள் தங்கள் அன்புக்குரியவர்களை நினைவுகூருவதற்கான முயற்சிகளும் தடுக்கப்பட்டுள்ளன. எதிர்ப்புத் தெரிவிப்பதற்கான உரிமையை கட்டுப்படுத்தும் இந்த நடவடிக்கைகள் நாட்டில் மேலும் பதற்றத்தையே உருவாக்கும்.

கருத்துச் சுதந்திரம், அமைதியான முறையில் ஒன்றுகூடுவதையும், , நல்லிணக்கம் மற்றும் சமூகங்களுக்கு இடையில் ஒற்றுமையை ஏற்படுத்தும் சூழலை யும் அரசாங்கம் உறுதி செய்வது இன்றியமையாததாகும். மேலும் பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம், ஊடக ஒளிபரப்பை ஒழுங்குபடுத்தும் சட்டம் குறித்தும் கவலைகள் எழுந்துள்ளன.

போர் முடிவடைந்து பதினான்கு வருடங்களாகியும், பாதிக்கப்பட்டவர்களும் அவர்களது குடும்பங்களும் உண்மை, நீதியைப் பெற்றுக்கொள்ளத் தொடர்ந்தும் இன்னல்களை அனுபவிக்கின்றனர். இருப்பினும் உண்மையைக் கண்டறியும் பொறிமுறை உட்பட, நல்லிணக்கத்தை முன்னெடுப்பதற்கு அரசாங்கம் ஆரம்பித்துள்ள முயற்சிகளை வரவேற்கின்றோம்.

மனித உரிமை மீறல்கள் மற்றும் ஈஸ்டர் தாக்குதல் சம்பவங்கள் தொடர்பான விசாரணைகள் மற்றும் வழக்குகளை சர்வதேச மனித உரிமைகள் நியமங்களுக்கு இணங்க அரசாங்கம் துரிதப்படுத்தவேண்டும். சர்வதேச உதவியுடன் ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல்கள் மற்றும் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் அவர்களது பிரதிநிதிகளின் முழுப் பங்கேற்புடன் சுயாதீனமான மற்றும் வெளிப்படையான விசாரணை அவசியம்-என்றார். (அ-ஒ-இ)

## இலங்கை...

யின் நிரந்தர வதிவிடப்பிரதிநிதி ஹிமாலி சுபாசினி அருணதிலக தெரிவித்துள்ளார். ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் 54 ஆவது அமர்வின் ஆரம்பத்தில் இலங்கையின் நிலைப்பாட்டை முன்னிறுத்தி நேற்று உரையாற்றுகையில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இலங்கை அரசாங்கம் பொறுப்புக்கூறல்திட்டத்துக்கு வழிவகுத்த இரண்டு 46/1, 51/1 தீர்மானங்களையும் முற்று முழுதாக நிராகரித்துள்ளது என்பதை நான் ஆரம்பத்திலேயே தெரிவிக்க விரும்புகின்றேன். எழுத்துமூல அறிக்கைகளையும் முடிவுகளையும் பரிந்துரைகளையும் நாங்கள் நிராகரிக்கின்றோம். இந்த தீர்மானங்களின் காணப்படும் உள்ளடக்கங்களை ஏற்றுக் கொள்ளாததால் பல நாடுகள் இந்தத் தீர்மா னத்தை எதிர்த்தன அல்லது அதில் வாக்களிப்பதைத் தவிர்த்தன என்பதை நாங்கள் மீண்டும் நினைவுபடுத்த விரும்புகின்றோம். ஆதாரங்களை சேகரிக்கும் பொறிமுறையை அவர்கள் ஏற்றுக்கொள்ளவேயில்லை. ஆதாரங்களை சேகரிக்கும் பொறிமுறை உருவாக்கப்பட்டுள்ளமை முன்னொருபோதும் இடம்பெறாத விடயம். இது மனித உரிமைபேரவையின் உறுப்பு நாடுகள் பேரவைக்கு வழங்கிய ஆணைக்கு அப்பால் செல்கின்றது என்பதை இலங்கை மீண்டும் வலியுறுத்த விரும்புகின்றது. இந்த தீர்மானங்கள் உள்விவகாரங்களில் தலையிடுபவை சமூகங்களை துருவமயப்படுத்துபவை.

மேலும் இந்தத் தீர்மானங்களை மனித உரிமைகளுக்கு அப்பாற்பட்ட காரணங்களுக்காகவும் தங்களின் உள்நாட்டு அரசியலுக்காகவும் ஒரு சில நாடுகள் பின்பற்றுகின்றன. இந்தத் தீர்மானத்தின் நிதிசார்ந்த தாக்கங்கள் குறித்து பல நாடுகள் கேள்வி எழுப்பியுள்ளன. இது பேரவையினதும் உறுப்பு நாடுகளினதும் வளங்கள் மீது பயனற்ற விதத்தில் செலவுகளை உருவாக்கக்கூடியதுஎன்பதைஇலங்கை மீண்டும் மீண்டும் சுட்டிக்காட்டி வந்துள்ளது.

இதன் காரணமாக இலங்கை இதற்கு ஒத்துழைப்பு வழங்காது. எனினும் பல்தரப்பு கட்டமைப்பில் ஆக்கபூர்வமாக பங்கெடுக்கின்ற நாடு என்ற அடிப்படையிலும் சர்வதேச சமூகத்துடனான எங்களின் ஆழமான ஈடுபாட்டை கருத்திற்கொண்டும் பேரவையின் ஏனைய பொறிமுறைகளுடன் ஆக்கபூர்வமான ஈடுபாட்டை இலங்கை தொடர்ந்தும் பேணும்- என்றார். (அ-ஒ-இ)

## 'சனல்-4'

திரனியல் ஊடக ஒழுங்குமுறை அலுவலகம் விசாரணைகளை ஆரம்பித்துள்ளது. தன்னை சங்கடப்படுத்தும் வகையில் 'சனல் -4 ' வேண்டுமென்றே இந்தக் காணொலியை ஒளிபரப்பியுள்ளதாக பிரிட்டன் இலத்திரனியல் ஊடக ஒழுங்குமுறை அலுவலகத்துக்கு சுரேஷ் ஷாலே முறைப்பாட்டை முன்வைத்திருந்தார்.

இந்தநிலையில், குறித்த காணொலி தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக பிரிட்டனின் இலத்திரனியல் ஊடக ஒழுங்குமுறை அலுவலகம் தெரிவித்ததாக அரச புலனாய்வுப் பிரிவின் தலைவர் சுரேஷ் ஷாலேயின் சட்டத்தரணி பசன் வீரசிங்க தெரிவித்துள்ளார். (அ-ஒ-6)

## சர்வதேச...

என்ற சந்தேகம் எமக்கு ஏற்பட்டுள்ளது. 'சனல் - 4 'காணொலி தொடர்பில் சர்வதேச விசாரணை நடத்தப்படவேண்டும் என்ற கோரிக்கையை எமது கட்சியும் விடுக்கின்றது என்று அக்கட்சியின் செயலர் சாகர காரியவசம் தெரிவித்தார்.

மொட்டுக் கட்சி தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

எவ்வித அடிப்படையுமின்றி 'சனல்- 4' ஊடாக காணொலி வெளியிடப்பட்டுள்ள நிலையில்தான் எமக்கு இந்தச் சந்தேகம் ஏற்பட்டுள்ளது.

2018 ஆம் ஆண்டு உள்ளூராட்சி சபைத்தேர்தலின்போது மொட்டுக் கட்சிக்கு எல்லாப் பக்கங்களில் இருந்தும் அச்சுறுத்தல்கள் விடுக்கப்பட்டன. அப்போது ஜனாதிபதியாக இருந்த மைத்திரிபால சிறிசேனகூட, வீதிகளில் திரிய வேண்டிவரும் எனக் கூறியிருந்தார். ஆனால் அந்தத்தேர்தலில் மக்களின் அமோக ஆணைகிட்டியது.

தேர்தல் முடிவு வந்தகையோடு அடுத்த ஜனாதிபதி மற்றும் பொதுத்தேர்தலில் எமது கட்சி வெற்றி நடைபோடும் என்பது எமக்கு தெரியும். நிலைமை இப்படி இருக்கையில் எதற்காக வேறுவித நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டும்? மூளை வளர்ச்சி குன்றியவர்கள்தான் இப்படியான காரணங்களைக்கூற வேண்டும்.

'சனல் - 4 'காணொலி குறித்து அரசுக்குத் தேவையெனில் சர்வதேச விசாரணை நடத்தலாம். சர்வதேச விசாரணையை நடத்துமாறு எமது கட்சியும் கோரிக்கை விடுக்கின்றது. 'சனல் - 4' இல் போலியான, திரிவுபடுத்தப்பட்ட தகவல்களே வெளியிடப்பட்டுள்ளன- என்றார். (அ-ஒ-44)

## 3 உடற்பாகங்கள்...

உடற்பாகங்களுடன் ஐந்து உடற்பாகங்கள் இதுவரை மீட்கப்பட்டுள்ளதாக அகழ்வுப் பணியின் இறுதியில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த முல்லைத்தீவு மாவட்ட சட்ட மருத்துவ அதிகாரி கனகசபாபதி வாசுதேவா தெரிவித்தார்.

இதேவேளை உடலங்கள் ஒன்றன் மேல் ஒன்றாக நெருக்கமாகக் குவிந்து கிடப்பதனால் சரியாக எத்தனை உடலங்கள் அடையாளப்படுத்தப்பட்டுள்ளது என்பது தொடர்பான தகவல்களைத் தெரிவிக்க முடியாதுள்ளது எனவும் அவர் குறிப்பிட்டார்.

அகழ்வுப்பணி தொடர்பில் காலை, மதியம் மற்றும் அகழ்வு நடவடிக்கை முடியும் நேரம் என்பவற்றின் போது மட்டுமே ஊடகங்கள் புகைப்படம் எடுக்கமுடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. ஐந்தாவது நாளாக நேற்று அகழ்வுப் பணி இடம்பெறும் நிலையில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர்களான கஜேந்திரகுமார் பொன்னம்பலம், செல்வராசா கஜேந்திரன் மற்றும் சட்டத்தரணி காண்டீபன் ஆகியோரும் நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரனும் அதனை நேரில் சென்று பார்வையிட்டனர். (அ-ஒ-19)

## 3 தனியார்...

ரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது என்று சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பிலேயே சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

மாணவர்களில் பலர் வெளிநாடுகளுக்கு கல்வி கற்கச் செல்கின்றார்கள். மாணவர்களுக்குத் தேவையான வசதிகளையும் வாய்ப்புகளையும் இந்நாட்டில் வழங்காமல் இருப்பது அவர்களுக்கு நாம் இழைக்கும் அநீதி. எமது நாட்டின் மருத்துவக் கல்லூரிகளில் விரிவுரையாளர்களாகவும் ஆலோசகர்களாகவும் பணியாற்றியவர்களே இங்கும் பணியாற்றுவார்கள். அவர்களுக்கு குறைந்தபட்சத் தகுதிகள் முன்வைக்கப்பட்டுள்ளன. மேலும், அந்தக் கல்லூரிகளுக்கு மூன்று மருத்துவமனைகளும் இணைக்கப்படவுள்ளன.

உயர்கல்விக்காக ஒவ்வொரு துறைகளுக்கும் உள்வாங்கப்படும் மாணவர்களின் எண்ணிக்கையை அதிகரிக்க வேண்டும். அதற்காக அரச வர்த்தமானி மூலம் குறைந்தபட்சத் தகுதிகள் குறிப்பிடப்பட்டுள்ளன. நாட்டில் சுமார் 13 மருத்துவபீடங்கள் உள்ளன. அதற்கு சுமார் 2 ஆயிரம் மாணவர்கள் மாத்திரமே உள்வாங்கப்படுகின்றார்கள்.

இந்தத் தனியார் மருத்துவக் கல்லூரிகளில் இணையும் மாணவர்களில், 10 சதவீதமானவர்களுக்கு கல்விப் புலமைப்பரிசில்களை வழங்குமாறும் இந்தப் பல்கலைக்கழகங்களிடம் தனிப்பட்ட முறையில் கோரப்பட்டுள்ளன.

அடிப்படைத் தகுதிகள் இருந்தும், தொடர்ந்தும் மருத்துவப் படிப்பைத் தொடர முடியாத மாணவர்கள் இந்நாட்டில் உள்ளனர். அவர்கள் வெளிநாடுகளுக்குச் சென்று தமது உயர்கல்வியைத் தொடர்ந்தால் அதற்கும் எமது நாட்டுப் பணமே செலவிடப்படுகின்றது. அதனால் குறைந்தபட்ச தகுதிகளைப் பெறும் மாணவர்களுக்கு எமது நாட்டிலேயே மருத்துவப் படிப்பைத் தொடரும் வாய்ப்பு இதன் மூலம் ஏற்படுகின்றது-என்றார். (அ-ஒ-26)

## மல்லாகம்...

விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

கடந்த 6ஆம் திகதி நீதிமன்றப் பதிவாளர் விடுமுறையில் சென்றுள்ளார். நேற்று 10ஆம் திகதி மீண்டும் பணிக்கு திரும்பியுள்ளார். வழக்குச் சான்றுபொருள் உள்ள அறையைப் பரிசோதனை செய்தபோது 50 கிலோ கஞ்சா காணாமல் போயிருந்தமை தெரிய வந்தது. இதையடுத்து தெல்லிப்பழை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

இது குறித்து யாழ். மாவட்ட பிரதி பொலிஸ் மா அதிபர் மஞ்சுள செனரத்னவை தொடர்பு கொண்டு கேட்டபோது, நீதிமன்றப் பதிவாளரால் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் பதிவாளரிடமும் வழக்குச்சான்று அறையுடன் தொடர்புடைய உத்தியோகத்தரிடமும் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார். (அ-ஒ-125)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசியல் தீர்வு காண்பதற்கு இதுவே சரியான தருணம்!

சந்திரிகா தெரிவிப்பு



கொழும்பு, செப்.12

தேசிய இனப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பதற்கு இதுவே சிறந்த தருணமாகும். இதைவிட நல்ல நேரம் கிடைக்கப்போவதில்லை. அதனால் வாய்ப்பை சரிவரப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் - இவ்வாறு தெரிவித்துள்ளார் இலங்கையில் நிறைவேற்று அதிகார ஜனாதிபதிப் பதவியை இரு தடவைகள் வகித்த சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

மாகாண சபைகளுக்கு பொலிஸ், காணி அதிகாரம் வழங்குவது தொடர்பில் வீண் அச்சம் கொள்ளவேண்டியதில்லை. இந்த அதிகாரங்களை வழங்கினால் நாடு பிரியும் என்ற வாதம் ஏற்புடையது அல்ல. நாட்டில் போர் முடிவடைந்தாலும் போருக்கு வித்திட்ட பிரச்சினைக்கு இன்னும் தீர்வு காணப்படவில்லை. அதற்கான ஆரம்பக் கட்ட முயற்சிகூட எடுக்கப்படவில்லை. அரசமைப்பின் '13'ஆவது திருத்தச்சட்டம் அரசமைப்பிலுள்ள ஓர் அங்கம். அது சட்டபூர்வமானது, அதை நடைமுறைப்படுத்தவே தமிழ்த் தலைவர்கள் கோருகின்றனர். அதை ஏன் நடைமுறைப்படுத்த முடியாது? அரசமைப்பின் '13' ஆவது திருத்தச்சட்டத்தை நடைமுறைப்படுத்தும் நிலைப்பாட்டில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இருக்கின்றார். இது தொடர்பில் என்னுடனும் பேச்சு நடத்தினார். முழு ஒத்துழைப்பு வழங்கப்படும் என நான் கூறினேன். ஆனால், நாட்டில் மாகாணசபைகள் இயங்கவில்லை. அதிகாரத்தைப் பகிர மாகாணசபை இருக்கவேண்டும், அப்படியானால் தேர்தல் நடத்தப்படவேண்டும்.

இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு இதுவே சிறந்த தருணம். அன்று சந்திரிகா செய்ததுசரி என்பதை மக்கள் இன்று ஏற்கின்றனர். 13க்கு அப்பால் சென்று அன்று நான் தீர்வை முன்வைத்தேன், மூன்றிலிரண்டு பெரும்பான்மையைப் பெறுவதற்கு 7 வாக்குகள்தான் போதுமானதாக இருக்கவில்லை. அந்த வாக்குகளை ஐக்கிய தேசியக் கட்சி வழங்கவில்லை. அவர்களுடன் ஐந்து மாதங்கள் பேச்சு நடத்திய பின்னரே அரசமைப்பைக் கொண்டுவந்தேன், பலவந்தமாகத் திணிக்கவில்லை. ஆனால், எதிர்த்து தீயிட்டுக் கொளுத்தினர்.

இனப்பிரச்சினை விடயத்தில் அரகலய ஊடாகவும் பெரும் மாற்றம் ஏற்பட்டுள்ளது. நல்லிணக்கம் பிறந்துள்ளது. அனைத்து இன மக்களும் ஒன்றிணைந்து செயற்பட்டனர். இளைஞர், யுவதிகளின் ஒன்றிணைந்த செயற்பாடுகளைக் காணும்போது விழிநீர் வந்தது. இது சிறந்த தருணம். நான் ஜனாதிபதியாக இருந்திருந்தால் மறுநாளே இனப்பிரச்சினைக்குத் தீர்வை முன்வைத்திருப்பேன். பொலிஸ் அதிகாரம் வழங்கினால் தனிநாடு உருவாக்கப்படும் எனவும் கூறுகின்றனர். முதலில் 13 இல் என்ன உள்ளது என்பதைப் படித்து அறியவும். பொலிஸ்மா அதிபர் தேசிய அரசால் நியமிக்கப்படுகின்றார், அவரால்தான் பிரதிப் பொலிஸ்மா அதிபர்கள் நியமிக்கப்படுகின்றனர், பொலிஸ்மா அதிபரின் கீழ்தான் இவர்கள் உள்ளனர். மாகாணத்தின் சட்டம், ஒழுங்கு தொடர்பில் இணைந்து செயற்படவேண்டும். எஸ்.எஸ்.பி.யும் பொலிஸ்மா அதிபரால்தான் நியமிக்கப்பட வேண்டும். ஏ.எஸ்.பி.க்கு கீழ்தான் மாகாணசபையால் நியமனம் வழங்க முடியும். அதைச் செய்வதற்கு மாகாண பொலிஸ் ஆணைக்குழுவின் அனுமதி வேண்டும். அந்த நியமனத்தில் அரசியல் தலையீடு இருக்காது. மேற்படி பொலிஸ் ஆணைக்குழுவில் மூவர் இடம்பெறுவர், ஒருவர்தான் பொலிஸ்மா அதிபரால் நியமிக்கப்படும் பிரதி பொலிஸ்மா அதிபர், மற்றையவர் அரச சேவை ஆணைக்குழு மற்றும் ஜனாதிபதியின் இணக்கப்பாட்டுடன் நியமிக்கப்படும் நபர், மூன்றாவது மாகாண முதல்வரின் பிரதிநிதி.

எனவே, மூன்றிலிரண்டு அதிகாரம் மத்திய அரசிடம்தான் உள்ளது. அடுத்து மாகாண பொலிஸாருக்கான பயிற்சிகூட முழுமையாக மத்திய அரசால்தான் வழங்கப்படும். ஆயுத வழங்கலும் மத்திய அரசு வசம்தான் உள்ளது. அப்படியானால் பொலிஸ் அதிகாரத்தில் உள்ள அச்சம் என்ன? மாகாணசபை எல்லைமீறி செயற்பட்டால் முழுஅதிகாரத்தையும் ஜனாதிபதி தனது கட்டுப்பாட்டின்கீழ் எடுக்கலாம். இராணுவத்தையும் அனுப்பலாம் - என்றார். (எ-44)

# இலங்கையின் கடன் நெருக்கடி தீர்வு முயற்சிகள் துரிதப்படும்!

## ஜி-20இல் இணக்கம்!

**கொழும்பு, செப். 12**

**இலங்கை, கானா போன்ற நாடுகளின் கடன் நெருக்கடிக்குத் தீர்வை காண்பதற்கான முயற்சிகளை இரட்டிப்பாக்குவதற்கு ஜி-20 நாடுகளின் தலைவர்கள் இணங்கியுள்ளனர்.**

வெள்ளை மாளிகை விடுத்துள்ள அறிக்கையொன்றில் இந்தத் தகவல் குறிப்பிடப்பட்டுள்ளது.

கடந்த வருடங்களில் தொடர்ச்சியாக எதிர்கொண்ட பொருளாதார அதிர்ச்சியிலிருந்து மீள முயலும் குறைந்த மற்றும் நடுத்தர வருமான நாடுகள் மீண்டும் தங்களை உறுதிப்படுத்திக்கொள்ள ஏதுவாக தீர்வு முயற்சிகளை ஜி-20 நாடுகள் இரட்டிப்பாக்கவுள்ளன. இலங்கை, கானா போன்ற நாடுகளில் தொடரும் கடன் நெருக்கடிக்குத் தீர்வைக் காண்பதற்கான தங்களின் முயற்சிகளை இரட்டிப்பாக்குவதற்கு புதுடில்லியில் தலைவர்கள் தங்கள் ஒத்துழைப்பை வெளியிட்டனர்.

அத்துடன், உலக வங்கி மற்றும் சர்வதேச நாணய நிதியத்தின் கூட்டங்களில் அர்த்தபூர்வமான முன்னேற்றத்தை எதிர்பார்க்கின்றோம் என்றும் பைடன் மாநாட்டின்போது தெரிவித்தார். (ம)

## காலநிலை மாற்றங்களுக்காக வருடாந்தம் 100 பில். டொலர்

சர்வதேச நாணய நிதியம் சுட்டிக்காட்டு

கொழும்பு, செப். 12

காலநிலை மாற்றத்துக்காக, வருடாந்தம் 100 பில்லியன் டொலர் ஒதுக்கீடு செய்ய வேண்டும். அத்துடன், ஆண்டு இறுதிக்குள் சர்வதேச நாணய நிதியத்தின் ஒதுக்கீட்டு வளங்களை அதிகரிப்பது இன்றியமையாதது என அதன் தலைவர் கிறிஸ்டலினா ஜோர்ஜியேவா தெரிவித்துள்ளார்.

புது டில்லியில் நடந்த ஜி-20 உச்சிமாநாட்டில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

குறைந்த மற்றும் நடுத்தர வருமானம் கொண்ட நாடுகளில் கடன் பாதிப்புகளைத் திறமையான, விரிவான மற்றும் உரிய முறையில் முகாமைத்துவம் செய்வதற்கு வழிவகுத்துள்ளது. சர்வதேச நாணய நிதியத்தின் 'பல்தரப்பு வளர்ச்சி வங்கிகளை வலுப்படுத்துவதன் ஊடாக ஆதரிக்கப்படும் காலநிலை மாற்றத்துக்காக் வருடாந்தம் 100 பில்லியன் அமெரிக்க டொலர் நிதியை வழங்குவதில், ஜி-20 நாடுகளின் உறுப்பினர்கள் முன்மாதிரியாக இருக்க வேண்டும்.

வரிச் சீர்திருத்தங்கள், முறையான பொதுச் செலவுகள், நிதி நிறுவனங்கள் மற்றும் கடன் சந்தைகள் மூலம் பசுமை மாற்றத்துக்கு நிதியளிப்பதற்கும் நிர்வகிப்பதற்கும் உள்நாட்டு வளங்களை நாடுகள் திரட்ட வேண்டும். உலகப் பொருளாதாரத்தை வலுவாகவும், மீள்தன்மையுடனும் மாற்றுவதற்கு, ஆண்டு இறுதிக்குள் சர்வதேச நாணய நிதியத்தின் ஒதுக்கீட்டு வளங்களை அதிகரிப்பதற்கான ஒப்பந்தத்தை எட்டுவது இன்றியமையாதது என அவர் தெரிவித்துள்ளார். வர்த்தகம் வளர்ச்சியின் இயந்திரமாக இருக்க வேண்டும் என்றால், நாம் வாழ்வாதாரங்களையும் வாய்ப்புகளையும் உருவாக்க வேண்டும். ஒருங்கிணைந்த பொருளாதாரத்தின் உணர்வில் அனைத்து நாடுகளும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும் - என்றார். (எ-இ)

## பித்தலாட்டம் செய்பவர் மைத்திரிபால சிறிசேன

கம்மன்பில கடும் காட்டம்

சுதந்திரக் கட்சியின் தலைவர் மைத்திரிபால சிறிசேன எவருக்கும் உண்மையாக இருக்கமாட்டார். சுதந்திரக் கட்சியை மீண்டும் ஐக்கிய தேசியக் கட்சியுடன் ஒன்றிணையும் முயற்சிக்குத் தடையாக இருந்த தயாசிறி கட்சியிலிருந்து நீக்கப்பட்டுள்ளார்- இவ்வாறு பிவிதுரு ஹெல உருமய கட்சியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான உதய கம்மன்பில தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

2014ஆம் ஆண்டு காலப்பகுதியில் ஒரு நாள் இரவு மஹிந்த ராஜபக்ச உட்பட ராஜபக்சக்களுடன் ஒன்றிணைந்து அப்பம் சாப்பிட்டு விட்டு மறுநாள் காலை ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து ஜனாதிபதி தேர்தல் பொது வேட்பாளராகத் தன்னை அறிவித்தார்.

ரணில் விக்கிரமசிங்கவுக்குக்கூட மைத்திரிபால சிறிசேன உண்மையாக இருக்கவில்லை. அரசமைப்புக்கு முரணாக மஹிந்த ராஜபக்சவைப் பிரமராக்கி நாட்டில் அரசியல் நெருக்கடிகளைத் தோற்றுவித்தார்.

நாடாளுமன்றத்தில் சுயாதீனமாகச் செயற்படும் அரசியல் கட்சிகளை ஒன்றிணைத்து கடந்த ஜனவரி மாதம் ஹெலிக்கொப்டர் சின்னத்தில் புதிய அரசியல் கூட்டணியை அமைத்தோம். கூட்டணியில் ஒன்றிணைந்து செயற்படுவேன் என்று கூறிவிட்டு உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக்குதல் சம்பவம் தொடர்பில் உயர்நீதிமன்றம் அவருக்கு நட்டஈடு விதிக்கப்பட்டதன் பின்னர் கூட்டணியில் இருந்து விலகினார்.

சுதந்திரக் கட்சியை மீண்டும் ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைக்கும் முயற்சியை அமைச்சுப் பதவி வகிக்கும் சுதந்திரக் கட்சியின் உறுப்பினர்கள் முன்னெடுத்துள்ளார்கள். அதற்கு கட்சியின் உறுப்பினர் தயாசிறி ஜயசேகர தடையாக இருந்ததால் தற்போது அவரை கட்சியின் பொதுச் செயலாளர் பதவியில் இருந்து நீக்கியுள்ளார்-என்றார். (எ-இ)

## குருதிக் கொடை



நல்லூர்க் கந்தசுவாமி ஆலயத்தின் பெருந்திருவிழாவை முன்னிட்டு சேவ்த லைவ் நிறுவனத்தின் ஏற்பாட்டில் இன்று முதல் எதிர்வரும் 15ஆம் திகதி வெள்ளிக்கிழமை வரை குருதிக்கொடை நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. யாழ். மாநகரசபையின் சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனை அலுவலக கேட்போர் கூடத்தில் மாலை 4 மணி முதல் இரவு 8 மணிவரை குருதிக்கொடை நிகழ்வு நடைபெறும். (எ-66)

வேலையாள் தேவை
யாழ்ப்பாணத்தில் வயோதிபரை பராமரிக்க ஆண் வேலையாள் தேவை.
077 815 3300

காணி விற்பனைக்கு
சங்கத்தானை சாவகச்சேரியில் அமைந்துள்ள நிலப்பரப்பு 02 விஸ்தீரணமுடைய காணியும் அதிலமைந்துள்ள வீடும் விற்பனைக்கு உண்டு.
0777 802 670
077 8098 991
(CS 26191) A-1



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 12.09.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org